# சிலாங்கூர் இன்று

இலவசம்

திருவள்ளுவர் ஆண்டு 2047/துர்முகி ஆண்டு சித்திரை மாதம் /ஏப்ரல் 2016

www.selangorku.com
MediaSelangorku
MediaSelangor
tv.selangorku.com
#SmartSelangor




# உலகத் தரத்தில் திறன்மிக்க மாநிலம்

திறன்மிக்க சிலாங்கூரை நோக்கி பயணம் செய்வதில் சிலாங்கூர் குடிமக்கள் மிகவும் உற்சாகத்துடன் நம்முடன் இணைந்திருக்கிறார்கள் என்பது எனது நம்பிக்கை. நாம் இப்போதே ஆரம்பிக்க வேண்டும்.

**மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் சுல்தான் சராபுடின் இட்ரிஸ் ஷா**

பக்கம் 3



## "திறன்மிக்க சிலாங்கூர்" கண்காட்சி

பக்கம் 4


இரபிஸி இரம்லி கைது ஒரு விடியலை நோக்கி பகுதி 2

மக்கள் பிரகடணம் 5

"சிலாங்கூர்கூ" வீடுகள் 7

சிலாங்கூர் மாநில அரசாங்கத்தின் திட்டங்கள் 8,9

பால் மரத்தொழிலாளி மாதச் சம்பளம் வெ.1200 12



# பண்டான் நாடளுமன்ற உறுப்பினர் இரபிஸி இரம்லி கைது... ஜனநாயகத்திற்கு எதிரானது

நாடாளுமன்ற வளாகத்தில் வைத்து பண்டான் நாடாளுமன்ற உறுப்பினர் இரபிஸி இரம்லியை கைது செய்த நடவடிக்கை ஜனநாயகத்திற்கு எதிரானது என்று சிலாங்கூர் மாநில மந்திரி பெசார் டத்தோஶ்ரீ அஸ்மின் அலி வர்ணித்தார். இஃது ஜனநாயகத்தினை மீறியல் செயல் என்றும் தனது கண்டனத்தை அவர் வெளிப்படுத்தினார்.அதுமட்டுமின்றி, இக்கைது நடவடிக்கை காவல்துறையின் அத்துமீறல் என்றும் நினைவுறுத்திய மந்திர் பெசார் சட்டத்தை சீரழிவின் பாதைக்கு இஃது இட்டுச்செலவதாகவும் குறிப்பிட்டார்.

ஜனநாயக முறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எனும் ரீதியில் இரபிஸி

**"பண்டான் நாடளுமன்ற உறுப்பினர் நாட்டில் நடக்கின்ற ஊழல்களை எடுத்துச் சொல்லும் கடட்பாடு இருப்பதாகவும், இந்த கைது நடவடிக்கை கண்டிக்கத்தக்கது" டத்தோ ஶ்ரீ அஸ்மின் அலி**



இரம்லிக்கு நாட்டில் நடக்கின்ற ஊழல்களையும் தவறுகளையும் எடுத்துச் சொல்லும் அதிகாரமும் கடப்பாடும் இருப்பதாக நினைவுறுத்திய அஸ்மின் அலி இந்த கைது நடவடிக்கை கண்டிக்கத்தக்கது என்று மீண்டும் நினைவுறுத்தினார்.

புகார் செய்யப்பட்டதன் அடிபடையில் விசாரணையை மேற்கொள்ளாமல், புகார் செய்தவரை காவல்துறை கைது செய்திருப்பது எந்த வகையில் நியாயமானது என புரியவில்லை. இங்கு அதிகார அத்துமீறலும் உண்மைக்கு எதிரான செயல்பாடும் அரங்கேறியுள்ளது என்றார்.

இதற்கிடையில், இந்த கைது நடவடிக்கை குறித்து விவரித்த பண்டான் நாடாளுமன்ற உறுப்பினர் இரபிஸி இரம்லி இதற்கு முன்னர் தம்மீது தாபோங் ஹாஜி ஊழல்,ஓய்வு ஊதியம் காலம் கடந்து வழங்குதல் மற்றும் இரகசிய பாதுகாப்பு சாட்டம் ஆகிய மூன்று வகையில் தம்மீது காவல்துறை விசாரணை செய்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இரபிஸியின் கைது நடவடிக்கை குறித்து எதிர்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிர்ப்திக் கொண்ட வேளையில் நாடாளுமன்றத்திலிருந்து புக்கிட் அமான் காவல்நிலையம் வரை பேரணியாய் சென்று தங்களின் அதிர்ப்தியை வெளிப்படுத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




#SmartSelangor
MEMBANGUN SMART SELANGOR YANG PEDULI

## சிலாங்கூர் இன்று செய்திக் குழு

Penasihat:
*Lembaga Editorial CCSB*

Ketua Pengarang:
*Cecelia Alphonsus*

Pengarang:
*Oru Vidiyalai Nokki Selangor Indru*

Wartawan:
*Sivakumar Balakrishnan*
*Nadesan varathan*
*Rajandran rasappan*
*Manimaran Subramaniam*
*Chandran Ramasamy*

Jurugambar:
*Asri Sapfie*
*Raheemie Arifin*
*Shuaib Ayob*

Grafik & Reka Cetak:
*Ramanand @ Rakat Ent.*

Alamat: *Aras 2,*
*Carlton Holiday Hotel & Suites.*
*No.1, Persiaran Akuatik 13/43,*
*Seksyen 13, 40100 Shah Alam,*
*Selangor Darul Ehsan..*

*Tel: 03-5523 4856*

*Fax: 03-5523 5856*

E-mail:
*editorselangorindru@gmail.com*

# புதியதொரு நம்பிக்கையோடு விடியலை நோக்கி

இந்திய சமுதாயமே, வணக்கம்.

ஒரு நல்ல தகவலை மக்களிடையே கொண்டு செல்ல சிறந்த தலம் இல்லாமல் போவதால்தான் சில வேளைகளில் பெரும் பின்னடைவுகளை நாம் சந்திக்க நேரிடுகிறது.அத்தகைய ஒரு சிக்கலை சிலாங்கூர் வாழ் இந்தியர்கள் எதிர்நோக்கிடக் கூடாது என்பதற்காகதான் விவேகமான சிந்தனையோடு சிலாங்கூர் மாநில அரசாங்கம் "சிலாங்கூர் இன்று" எனும் தமிழ்ப்பதிப்பினை வெளியீட முடிவெடுத்து.அஃது தற்போது உங்கள் கரங்களில் தவழ்ந்துக்கொண்டிருக்கிறது.

சித்திரைப் புத்தாண்டில் புதியதொரு நம்பிக்கையாகவும் புதியதொரு தலமாகவும் உருவெடுத்திருக்கும் "சிலாங்கூர் இன்று" இந்திய சமுதாயத்தினை மாற்று சக்தியாக உருவாக்கிடும் மாபெரும் தலமாகவும் புதியதொரு அடையாளத்துடன் விடியலை நோக்கி பயணிக்கிறது. இப்பத்திரிக்கை மாற்றுத்தலமாக உருவெடுத்திடும் எனும் நம்பிக்கையோடு இந்த சித்திரைப் புத்தாண்டில் உங்கள் கரங்களில் "சிலாங்கூர் இன்று" தவழ்ந்துக் கொண்டிருக்கிறது என்பதை பெருமிதமாக பதிவு செய்துக்கொள்கிறோம்.

இந்நாட்டில் நமது வரலாறு கொஞ்ச கொஞ்சமாய் மறைக்கப்பட்டு வருகிறது. அதனை மீட்டெடுத்து நிலை நிறுத்துவதில் நமது ஒவ்வொருவரின் பங்களிப்பானது மிகவும் அவசியமானது.இன்னமும் நாம் நமது பழைய வரலாற்றினை பேசி காலம் கடத்துவதை காட்டிலும் விவேகமான செயல்பாட்டினால் புதியதொரு நம்பிக்கையோடு மாபெரும் விடியலை நோக்கி பயணிக்க ஆயத்தமாக வேண்டும்.

கடந்த 2008ஆம் ஆண்டு நடைபெற்ற பொது தேர்தலில் நாட்டில் குறிப்பாக இந்திய சமுதாயத்திடம் பற்றிக்கொண்ட சிந்தனை மாற்றமானது நாட்டின் அரசியல் சூழலையே மாற்றியமைத்தது என்றால், அஃது மறுப்பதற்கில்லை. அஃது 2013ஆம் ஆண்டு நடந்த பொது தேர்தலிலும் தொடர்ந்தது என்பது மகிழ்ச்சியான ஒன்றாக இருந்தாலும் சிலாங்கூர் மாநில ஆட்சியை தற்காத்துக்கொண்ட நாம் மத்திய ஆட்சியை கைப்பற்றுவதில் தொடர்ந்து பின்னடைவினை சந்தித்து வருவது கசப்பான ஒன்றாகவே விளங்குகிறது.

புத்ரா ஜெயாவை கைப்பற்றினால் இந்நாட்டினை பாக்காதன் ஹராப்பான் கூட்டணி எம்மாதிரியான ஆற்றலுடனும் முன்னேற்றகரமான பாதையிலும் கொண்டு செல்லும் என்பதற்கு டத்தோஶ்ரீ அஸ்மின் அலி தலைமையிலான சிலாங்கூர் மாநில ஆட்சியே சான்றாக விளங்குகிறது.சிலாங்கூரில் நமது மாநில அரசாங்கம் பல்வேறு வளர்ச்சி திட்டங்களையும் மேம்பாட்டுத் திட்டங்களை செயல்பட்டுத்தினாலும் அதில் இந்திய சமுதாயம் விடுப்பட்டு விடக்கூடாது என்பதில் தனி கவனம் செலுத்தி வருவதை இங்கு பெருமிதமாக சொல்லதான் வேண்டும்.

இந்திய சமுதாயத்தின் மீதும் அதன் வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் தனி கவனம் செலுத்தி அதற்கான செயல்திட்டங்களை உருவாக்கி அமல்படுத்தி வரும் மந்திரி பெசார் டத்தோஶ்ரீ அஸ்மின் அலியின் தலைமையிலான சிலாங்கூர் மாநில அரசுக்கு நாம் தொடர்ந்து உன்னதமான ஒத்துழைப்பையும் ஆதரவினையும் வழங்கிட வேண்டும். நமது ஆதரவும் ஒத்துழைப்பும் தொடர்ந்தால் சிலாங்கூர் வாழ் இந்தியர்கள் புதியதொரு விடியலை நோக்கி நம்பிக்கையோடு பயணிக்கும் சூழலை நாம் காண முடியும் என்பது வெறும் வார்த்தை மட்டுமில்லை.அஃது ஓர் இனத்தின் நம்பிக்கையாகவே திகழ்கிறது.

சிலாங்கூர் அரசு இந்திய சமுதாயத்திற்காக பல்வேறு வாய்ப்புக்களையும் வசதிகளையும் தொடர்ந்து அமல்படுத்திதான் வருகிறது.ஆனால்,நமக்கான சரியான ஊடகம் மற்றும் தகவல் பரிமாற்றங்கள் இல்லாத நிலையால்,அவை நம் சமுதாயத்திடம் சென்றடைவதில் பெரும் சிக்கலும் சிரமமும் ஏற்பட்டிருந்தது.இன்று புதிதாக பிறந்திருக்கும் "சிலாங்கூர் இன்று" வழி இந்திய சமுதாயத்திற்கான அரசின் வாய்ப்புக்கள் திட்டங்கள் ஆகியவை மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்யும் அதேவேளையில் சிலாங்கூர் வாழ் மக்களுக்காக மாநில அரசின் நலதிட்டங்களையும் உங்களை வந்தடைவதை "சிலாங்கூர் இன்று" குழு உறுதி செய்யும்.

சிலாங்கூர் அரசிற்கும் சிலாங்கூர் வாழ் இந்திய சமுதாயத்திற்கு ஓர் உறவுப் பாலமாக "சிலாங்கூர் இன்று"விளங்கிடும். அதேவேளையில் சிலாங்கூரில் இந்திய சமுதாயம் புதியதொரு நம்பிக்கையோடு விடியலை நோக்கி பயணிப்பதை "சிலாங்கூர் இன்று" உறுதி செய்யும் என்பது மட்டும் தின்னம்.புதிய தலம்!புதிய சிந்தனை! இவை நம் சமுதாயத்தின் விடியலை உறுதி செய்யும் அதேவேளையில் அதன் வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் புதியதொரு சரித்திரத்தையும் படைக்கும்.

இந்திய சமுதாயம் விடியலை நோக்கி பயணிக்க கரம் பிடித்து அழைத்துச் செல்ல புதிதாக பிறந்திருக்கும் "சிலாங்கூர் இன்று" காலத்திற்கு ஏற்ப உருமாற்றங்களுடன் நம் சமுதாயத்தின் சேவகனாக தொடர்ந்து செயல்படும் என்பதை நம்பிகையோடும் உறுதியோடும் இங்கு பதிவு செய்துக்கொள்கிறோம்..

நன்றி.

*ஒரு விடியலை நோக்கி*
*சிலாங்கூர் இன்று*

# உலகத் தரத்திலான திறன் மிக்க சிலாங்கூர் மாநிலத்தை உருவாக்குவோம்



சிலாங்கூர் மாநில அரசு மக்களின் எதிர்பார்ர்பினை பூர்த்தி செய்து அவர்களின் தேவைகளை நிறைவு செய்து அதன் அடிப்படையிலான செயல் திட்டங்களையும் ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டு விவேகமான் சேவையினை முன்னிறுத்தி சிலாங்கூர் மாநிலத்தை உலகத் தரத்திலான திறன் மிக்க மாநிலமாக உருவாக்கிட வேண்டும் என சிலாங்கூர் சுல்தான் கோரிக்கை விடுத்தார்.

மேலும்,சிலாங்கூர் அரசு பல நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்கிட வேண்டும் என குறிப்பிட்ட சுல்தான் சிலாங்கூர் மாநிலம் தனக்கு உலக ரீதியில் திறன் மிக்க மாநிலமாக புகழடைய வேண்டும் என தனது எதிர்பார்ப்பினை வெளிப்படுத்தினார்.திறன் மிக்க மாநிலமாய் உருவாக பல்வேறு இன்னல்களையும் சவால்களையும் சமாளித்து,தடைகளை உடைத்தெறிய வேண்டும் என அன்மையில் கூடிய மாநில சட்டமன்றத் தொடரை தொடக்கி வைத்து உரையாற்றுகையில் சுல்தான் இவ்வாறு கூறினார்.

தற்போதைய அரசியல் சூழலில் மாட்டிக்கொள்ளாமல்,சிலாங்கூர் அரசாங்கம் விவேகமாய் செயல்ப்பட்டு மாநிலத்தில் நிலவும் சிக்கல்களுக்கும் பிரச்னைகளுக்கு ஒரு வட்டத்துக்குள் தீர்வினை நோக்கி நகராமல் வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் சிந்தித்து சவால்களை உடைத்தெறிய வேண்டும் என்றும் சுல்தான் அறிவுறுத்தினார்.

அதுமட்டுமின்றி,திறன் மிக்க சிலாங்கூர் என்பது பிரச்னைகளை களைவது மட்டுமில்லை, மாறாய், தொழில்நுட்பம் மற்றும் உட்கட்டமைப்பையும் உள்ளடக்கியது என்றார். அதேவேளையில்,நாம் தினமும் எதிர்நோக்ககூடிய குற்றவியல், போக்குவரத்து, அரசு சேவைகள், கல்வி மற்றும் சுகாதாரம் ஆகியவற்றையும் உள்ளடக்கியது என்றும் நினைவுறுத்தினார்.

தொடர்ந்து பேசிய சுல்தான் சிலாங்கூர் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடும் திட்டங்களும் பொருளாதார மேம்பாடு வளர்ச்சி திட்டங்களும் மிகவும் அவசியமென்றும் சிலாங்கூர் மக்களை வியபாரத்திலும் குறிப்பாக அனைத்துலக ரீதியிலான் வாணிபத்தில் மேம்படுத்திட வேண்டும். அதற்கான வாய்ப்புகளையும் திட்டங்களையும் மாநில அரசு வகுக்க வேண்டும் எனும் ஆலோசனையையும் முன் வைத்தார்.அதேவேளையில் வேலை வாய்ப்புக்களில் தனி கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

உலகத் தரத்திலான சிலாங்கூர் மாநிலம் உருவாவதில் மக்கள் மிகவும் ஆர்வமாக இருப்பதை தாம் உணர்வதாகவும் அஃது நம்பிக்கையானதும் கூட என குறிப்பிட்ட சுல்தான் அதனை அதன் இலக்கை நோக்கி வெற்றிகரமாக உயர்த்திடும் திட்டங்களையும் ஆக்கப்பூர்வ செயல்பாடுகளையும் சிலாங்கூர் அரசாங்கம் விரைந்து முன்னெடுக்க வேண்டும் எனவும் மாநில அரசாங்கத்திற்கு அவர் கோரிக்கை விடுத்தார்.







# மக்களுக்காக மாநில அரசு மேற்கொள்ளும் திட்டங்களைக் கண்டு சிலாங்கூர் சுல்கான் பெருமிதம் கொண்டார்

மாட்சிமை தாங்கிய சிலாங்கூர் சுல்தான் மக்களின் நலனுக்காகவும் அவர்களின் மேம்பாட்டு வளர்ச்சிக்காகவும் சிலாங்கூர் மாநில அரசாங்கம் மேற்கொள்ளும் திட்டங்களை கண்டு பெருமிதம் கொண்டார். மக்களுக்காக சிலாங்கூர் அரசாங்கம் அமல்படுத்தியிருக்கும் ஹிஜ்ரா கடனுதவி திட்டம்,திறன்மிக்க இலவச பேருந்து திட்டம்,இலவச இணையம் திட்டம் ஆகியவற்றோடு சிலாங்கூர் அரசின் மக்கள் சார்புடைய நல திட்டங்கள் சுல்தானின் நன்மதிப்பினை பெற்றுள்ளது.

மக்களின் வறுமையை போக்குவதற்காக மாநில அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் தம்மை மிகவும் மகிழ்ச்சியடைய வைத்திருப்பதாக கூறிய சுல்தான் மாநில அரசின் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மேலும் தொடர வேண்டும் என கேட்டுக்கொண்டார். இதற்கிடையில், தாம் சிலாங்கூர் அரசாங்கத்தின் ஹிஜ்ரா திட்டத்திற்கு வெ.10 கோடியை ஒப்புக்கொண்டதற்கு காரணம் இத்திட்டம் சிறுத்தொழில் வணிகத்திற்கு மிகவும் உறுத்துணையாக இருக்கும் எனும் நம்பிக்கையால்தான் என்றார். இத்திட்டத்தின் கீழ் 18,000க்கும் மேற்பட்ட வணிகர்கள் நன்மையடைவார்கள் என்றும் குறிப்பிட்டார்.

மாநில அரசின் திறன்மிக்க இலவச பேருந்து சேவை குறித்து குறிப்பிடுகையில் அதற்காக ஒதுக்கப்பட்ட வெ.10 மில்யனால் சிலாங்கூர் வாழ் மக்கள் பெரும் மகிச்சியடைவார்கள் என்றார். இத்திட்டம் மிகவும் வரவேற்கத்தக்கது. தொடர்ந்து பேசிய அவர் மலிவு விலை வீடுகளுக்கான வரி,கடைகள் மற்றும் சந்தை உரிமையாளர்களுக்கான வரியை சிலாங்கூர் மாநில அரசு தடைசெய்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது என்றார். இதன் வழி மக்கள் பெரும் மகிழ்ச்சியடைவார்கள் என்பது தின்னம்.

மாநில அரசாங்கத்தின் விவேகமான திட்டங்களில் ஒன்றான இலவச இணையம் திட்டத்தின் வாயிலாக சிலாங்கூர் வாழ் மக்களும் குறிப்பாக அதிகமான வணிகர்கள் பயன்பெறுவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு சுல்தான் பதிவு செய்தார்.மேலும்,நியாயமான முறையில் பங்கீட்டை மேற்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம் என்றும் நினைவுறுத்திய சுல்தான் மாநில செல்வ வளத்தை குறிப்பிட்ட ஒரு தரப்பினர் மட்டுமே அனுபவிக்காமல் அதனை சிலாங்கூர் வாழ் மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையிலான சிலாங்கூர் அரசாங்கத்தின் திட்டங்கள் தம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்தியதாக சுல்தான் சிலாங்கூர் அவர்கள் தெரிவித்தார்.

SELANGOR

# ஸ்மாட் சிலாங்கூர் கண்காட்சி விவேகமான தீர்வுக்கு வழிவகுக்கும்

ஸ்மாட் சிலாங்கூர் கண்காட்சி விவேகமான தீர்வுக்கு வழிவகுக்கும். இந்த கண்காட்சி வழி இனி வருங்காலங்களுக்கு சிலாங்க்கூர் மாநிலம் "ஸ்மாட்" அதாவது விவேகமான மாநிலமாக உருமாறும் பொருப்பினை கொண்டிருப்பதை தாம் பெரிதும் உணர்ந்திருப்பதாக மாநில மந்திரி பெசார் டத்தோஸ்ரீ அஸ்மின் அலி கூறினார்.

முதன்முறையாக ஏற்பாடு செய்யபப்பட்டிருக்கும் இந்த கண்காட்சி பல இணைய மின் பொருள்களையும் அதன் பயன்பாட்டினையும் கொண்டிருப்பதை விவரித்திருந்தது பலரை கவர்ந்த அம்சமாக இருந்ததாக குறிப்பிட்ட அவர் மாநில அரசிற்கு மிக முக்கியம் என கருதப்படும் சில சிக்கல்களுக்கு தீர்வுகாண நாங்கள் மின் பொருள் உருவாக்க கோரிக்கையையும் முன் வைத்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்த பயனான கண்காட்சியை ரெட்தோன் இன்டநெசினல் பெர்ஹாட், ZTE (ம) சென்டிரியான் பெர்ஹார் , ஸ்பாசில் வோக்கஸ் சென்டிரியான் பெர்ஹாட், பிரௌஸ் & சலிவான் கொன்சால்டன்சி சிரத்திஜிஸ் சென்டிரியான் பெர்ஹாட், செல்கோம் அக்ஸ்ஆதா சென்டிரியான் பெர்ஹாட்,மில்லியினியம் ரேடிஸ் செ ண்டிரியான் பெர் ஆட், சிலாங்கூர் இன்பர்மேசன் டெக்நொலொஜி & இகாமஸ் , டவுன் & கவுன்ரி பிலானிங் டிப்பாட்மன் மற்றம் மந்திரி பெசார் பெர்ஹாட் இன்கோப்பரேசன் ஆகிய நிறுவனங்கள் தங்களை இணைத்துக் கொண்டதாகவும் கூறினார்.

அதற்கு முன்னதாக இது தொடர்பில் பொது மக்கள் உட்பட பல்வேறு தரப்பினரின் கருத்துக்களும் ஆலோசனைகளும் கண்டறியப்படும். அதுமட்டுமின்றி,முக்கிய தேவைகள் மற்றும் பிரச்னைகளுக்கான சரியான தீர்வுகளை கண்டறிந்து அதற்கு நல்லதொரு தீர்வினை ஏற்படுத்துவதே எங்களின் முதன்மை நோக்கம் என்றும் மந்திரி பெசார் கூறினார்.தொடர்ந்து கூறிய அவர் குறிப்பிட்ட முக்கிய பிரச்னைகளுக்கு விரைவாக தீர்வினை ஏற்படுத்த "ஸ்மாட்" தொலைதொடர்புக் கருவியோடு மின் பொருள் இணைக்கப்பட்டு அதனை விவேகமாய் பயன்படுத்தலாம் என்றார்.

இந்த மின் பொருள் சேவையை பயன்படுத்தி பொது மக்கள் தங்களின் புகார்களையும் சம்மதப்பட்ட இலாகாவிற்கு அனுப்பி வைக்கலாம். புகார் பெறப்பட்ட பின்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டதை உறுதி செய்யும் விதமாய் புகார் செய்யப்பட்டவருக்கு தகவல் அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவித்த மந்திரி பெசார் "ஸ்மாட்"சிலாங்கூர் சிலாங்கூர் வாழ் மக்களை "ஸ்மாட்" டான இலக்கை நோக்கி கொண்டு செல்லும் என்பது மட்டும் தின்னம் என்றும் தனது நம்பிக்கையினை வெளிப்படுத்தினார்.



விவேகமான மாநிலமாக உருமாறும் பொருப்பினை கொண்டிருப்பதை தாம் பெரிதும் உணர்ந்திருப்பதாக மாநில மந்திரி பெசார் டத்தோஸ்ரீ அஸ்மின் அலி கூறினார்.

# நாட்டின் முக்கிய முதலீட்டு மையமாக சிலாங்கூர் விளங்குகிறது

## டத்தோ ஸ்ரீ அஸ்மின் அலி

சிலாங்கூர் மாநிலம் நாட்டின் முதலீட்டுக்கு பெரும் பங்காற்றுவதாகவும் நாட்டின் முக்கிய முதலீட்டு மையமாகவும் சிலாங்கூர் திகழ்வதாகவும் மாநில மந்திரி பெசார் டத்தோஸ்ரீ அஸ்மின் அலி தெரிவித்தார்.கடந்தாண்டில் இம்மாநிலத்தில் அதிகரித்துள்ள முதலீட்டு தொகையினை கணக்கிடுகையில் இதனை உறுதியாக கூற முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சிலாங்கூர் மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் பெருமளவிலான முதலீட்டு நடவடிக்கைகளால் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைவதோடு வருமானத்தையும் தொடர்ந்து அஃது மேலோங்க வைப்பதாகவும் குறிப்பிட்ட அவர் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையையும் சிலாங்கூர் மாநில பெற்றிருப்பதோடு கூட்டரசு மாநிலத்திற்கு அடுத்த நிலையில் சேவைத்துறையிலும் சிலாங்கூர் மிளிர்வதாகவும் கூறினார்.

மேலும்,வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சேவைத்துறையில் முதலீடு செய்வதற்கு சிலாங்கூர் மாநிலமே உகர்ந்த மாநிலமாக கருதுவதாகவும் குறிப்பிட்ட மந்திரி பெசார் கடந்த 2010ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையில் சிலாங்கூர் மாநிலமும் கூட்டரசு பிரதேசமும் நாட்டின் சேவைத்துறைக்கு 49.9 விழுகாடு பங்களிப்பினை வழங்கியிருப்பதாக புள்ளி விவரம் காட்டுவதையும் அவர் சுட்டிக்காண்பித்தார்.

நாட்டின் முதலீட்டு அபிவிருத்தி கழகத்தின் கணக்கிட்டின் கீழ் கடந்த 2015ஆம் ஆண்டில் 222 முதலீட்டு திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட வேளையில் 2014ஆம் ஆண்டு 7.04 பிலியனாக இருந்த முதலீட்டு தொகை 2015ஆம் ஆண்டு 7.09 பிலியனாக உயர்வுக் கண்டிருப்பதை அவர் நினைவுக்கூர்ந்தார். இஃது நல்லதொரு வளர்ச்சியினை காட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாநில அரசின் வெளிப்படையான கொள்கையே இதற்கு காரணம் என கூறிய அஸ்மின் அலி ஊழல் இல்லாத வெளிப்படையான கொள்கையை கடைப்பிடிக்கும் அரசாங்கத்தையே மக்கள் பெரிதும் எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.மாநிலத்தின் தற்போதைய தலைமைத்துவம் பொருப்புமிக்க வெளிப்படையான கொள்கையை தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்றும் மந்திரி பெசார் உறுதி அளித்தார்.






# தேசத்தின் தவறான பாதையை மீண்டும் மாற்றி அமைப்போம்.

பொது மக்களின் நம்பிக்கைக்கும் உலகின் தவறான பார்வைக்கும் உடனடியாக நல்லதொரு தீர்வை காண வேண்டுமானால் உடனடியாக நமது தேசத்தின் இப்போதைய நகர்வினை மீண்டும் மாற்றி அமைக்க வேண்டும்.

கெஅடிலான் கட்சியின் தேசிய துணைத்தலைவரும் சிலாங்கூர் மாநில மந்திர் பெசாருமான டத்தோஸ்ரீ அஸ்மின் அலி கூறுகையில் எதிர்மறையான நடவடிக்கையினாலும் செயல்திட்டங்களாலும் நம் நாட்டின் நிர்வாகத்தில் குளறுப்படி ஏற்பட்டு மலேசியர்களுக்கு மிகுந்த அவமானத்தை அளித்திருக்கிறது என்றார்.நாட்டை முறையான வழியில் நடத்தினால் அவமானத்திற்கு ஏது இடம்?

இதற்கு காரணம் புத்ராஜெயாவில் திருடர்கள் நம் நாட்டின் கௌரத்தின் மீது அக்கறைக் கொள்ளாமல் இருக்கிறார்கள் என்று ஷா அலாம் மாநாடு மண்டபத்தில் கடந்த 27.03.2016இல் நடந்த நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாட்டின் சட்டத்திட்டங்களை மாற்றி அமைக்கும் முயற்சியில் நாம் இறங்கிட வேண்டும்.நாட்டின் நிலையான சூழ்நிலைத்தான் அதன் வளர்ச்சியையும் மேம்பாட்டையும் உறுதி செய்ய முடியும்.காட்டுமிராண்டித்தனமான சட்டத்திட்டம் மற்றும் அரசியல் கலாச்சாரத்தை புறக்கணிப்போம் என்றார்.

நாடு தற்போது ஊழல் விவகாரத்தில் மிக பெரிதான நிலையில் சிக்கியுள்ளது.ஊழல் வாதிகள் மீது இன்னமும் விசாரணை தொடங்கப்படவில்லை.கோடிக்கணக்கான பணமோசடி விவகாரமும் விசாரணையின்றி கிடப்பில் கிடக்கிறது.அது தொடர்பில் கைது நடவடிக்கை எதுவுமில்லாத நிலையில் ஒவ்வொருவரும் மிகவும் சாதூரியமாக குற்றத்திலிருந்து தப்பித்து தங்களுக்கான பாதுகாப்பினை தேடிக்கொள்கிறார்கள்.

இம்மாதிரிய குற்றச்சாட்டுகளிலிருந்து விடுப்படவும் மக்களின் கவனத்தை திசைதிருப்பவும் டத்தோஸ்ரீ அன்வாரை விடுதலை செய்யக்கோரி சிலாங்கூரில் அமைக்கப்பட்டிருக்கும் அறிவிப்பு பலகை விவகாரத்தை சர்ச்சையாக்கிட முற்பட்டுள்ளனர்.அவர்கள் டத்தோஸ்ரீ அன்வாரை கண்டு நடுங்குகிறார்கள் என்பதை இஃது வெளிப்படையாக உணர்த்துகிறது.அம்னோ தேசிய முன்னணியினர் போராட்டவாதிகளா அல்லது கோழைகளா என்பதை இதன் வழி மக்கள் முடிவு செய்துக்கொள்வார்கள் என்றார்.

இதற்கிடையில்,நாட்டின் 14வது பொது தேர்தல் நியாயமாகவும் நேர்மையாகவும் நடைபெற வேண்டுமானால் 15 லட்சம் வங்காளதேசிகள் மலேசியர்களின் எதிர்காலத்தை நிர்ணயம் செய்வதை நாம் தடுத்திட வேண்டும்.இஃது நாட்டை நேசிக்கும் ஒவ்வொருவரின் கடமையும் கூட என்றார்.

இவ்வேளையில்,நாம் நமது சொந்த கருத்து வேறுபாடுகளையும் அரசியல் சித்தாந்தங்களையும் தள்ளி வைத்து விட்டு ஒரே இலக்கின் கீழ் ஒன்றிணைந்து நமது நாட்டின் நலனுக்கும் மக்களின் எதிர்காலத்திற்கும் மாபெரும் மாற்று சிந்தனையோடு களமிறங்க வேண்டும் என அஸ்மின் அலி கேட்டுக்கொண்டார்.

ஷா அலாம் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாட்டின் பல முக்கிய தலைவர்களுடன் முன்னால் பிரதமர் துன் மகாதீர் முகமது, முன்னால் துணைப்பிரதமர் டத்தோஸ்ரீ முகிடின் யாசின் ஆகியோருடன் ஜனநாயக செயல் கட்சியின் (டி.ஏ.பி) ஆலோசகர் தோழர் லிம் கிட் சியாங் அவர்களும் கலந்துக்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# பல்வேறு சித்தாந்தத்தின் இணைப்பே மாபெறும் ஒற்றுமையின் அறிகுறி

பல்வேறு சிந்தனைகளும்,அரசியல் கட்சிகளும்,பல்வேறு சித்தாந்தங்களும் அரசியல் கருத்து வேறுப்பாட்டினை கலைந்து விட்டு பிரஜைகளின் பிரகடணத்தில் அனைவரும் ஒரே இலக்குடன் களமிறங்கியது. இந்நாட்டில் தேசிய முன்னணி அரசாங்கம் இல்லாமல் கூட மக்கள் ஒற்றுமையாகவும் புரிந்துணர்வோடும் வாழ முடியும் என்பதை பறைச்சாற்றுவதாக டத்தோ உசாம் மூசா நினைவுறுத்தினார்.

இந்த ஒற்றுமை போராட்டத்தின் முதன்மை காரணமே நாட்டின் பிரதமர் டத்தோஸ்ரீ நஜிப் து இரசாக்கை பதவி விலகக் கோருவதுமட்டுமில்லை. மாறாய்,அனைவரும் ஒன்றினைந்து ஒரு குடையின் கீழ் ஒற்றுமையாக மாபெரும் மாற்றத்தை உருவாக்குவதாகவும்.நாட்டின் நலன் கருதி அதன் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு தலைமைத்துவ மாற்றத்தில் உறுதியாகவும் தெளிவான நிலைப்பாட்டிலும் இருக்கும் மலேசியர்கள் தலைமைத்துவ மாற்றத்திற்கு நாட்டின் பொது தேர்தல் வரை காத்திருக்க வேண்டாம் என அவர் அறிவுறுத்தினார்.

நாட்டின் இதற்கு முன்னர் அப்போதைய பிரதமர்களான் துன் மகாதீரும் துன் அப்துல்லா அமாட் படாவியும் பதவி விலகும் போது எந்தவொரு சிக்கலும் பிரச்னைகளும் உருவாகாத நிலையில் நஜிப்பை பதவி விலகக் கோரும் போது எழுதுள்ளதாக சுட்டிக்காண்பித்த அவர் நஜிப்பின் தலைமைத்துவத்தால் நாட்டில் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கும் சிக்கல்கலுக்கும் ஆளாவதாகவும் நினைவுறுத்தினார்.

அதேவேளையில் பாஸ் கட்சியும் மலேசியாவின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டும் மலேசியர்களின் எதிர்பார்ப்பையும் எண்ணத்தையும் புரிந்துக்கொண்டு புதியதொரு தலைமைத்துவத்தை உருவாக்கி இனியும்ம் காலம் கடத்தாமல் மக்களுக்காக களமிறங்கு கட்சியாக உருவெடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

கடந்த மாதம் அம்பாங் ஜெயா நகராண்மைக் கழகத்தில் நடைபெற்ற பேரணி ஒன்றில் உரையாற்றுகையில் டத்தோ உசாம் மூசா இவ்வாரு கோரிக்கை விடுத்தார். அதேவேளையில்,மேற்கொள்ளப்படும் பல்வேறு தலைவர்களை ஒன்றிணைக்கும் முயற்சியில் பல்வேறு தலைவர்களுடன் மகாதீரும் டத்தோஸ்ரீ அன்வாரும் ஒன்றிணையும்போது இந்த விவேகமான செயல்பாடானது அர்த்தமுள்ளதாக அடையாளம் காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.



டத்தோஸ்ரீ அன்வாரை முன்னால் பிரதமர் துன் மகாதீர் தற்காக்கவும் பாதுகாக்கவும் இஃது நல்லதொரு தருணம் என தாம் நம்புவதாக கூறிய அவர் இவ்விரு தலைவர்களும் ஒன்றிணைவது காலத்தின் கட்டாயம் என்றும் அந்நிலை உருவாக நாம் அனைவரும் கடவுளை பிராத்திருப்போம் என்றார்.

பதவியை அதிகாரம் இங்கு முறையின்றி தவறாக பயன்படுத்தப்படுகிறது.பிரதமர் பதவியிலிருந்து நஜிபி விலகினாலும் அப்பதவியை அலங்கரிக்க அம்னோவில் தகுதியானவர்கள் யாருமில்லை. என தாம் நம்புவதாக கூறிய அவர் அம்னோ முறையான செயல்பாடுகளுடன் விவேகமான சிந்தனையோரு வளர்த்தெடுக்கப்படாததே அதற்கு காரணம் என்றும் டத்தூ உசாம் மூசா தெரிவித்தார்.

# குறுகிய காலத்தில் நமது இலக்கை அடையவே

## “பிரஜைகளின் பிரகடனம்” - துன் மகாதீர்!!

மிக குறுகிய காலத்தில் நமது இலக்கை நாம் அடைய வேண்டும் எனும் உன்னத சிந்தனையோடுதான் இந்த "பிரஜைகளின் பிரகடனம்"முழங்கப்பட்டதாக நாட்டின் முன்னால் பிரதமர்களின் ஒருவரான் துன் மகாதீர் தெளிவுப்படுத்தினார்."பிரஜைகளின் பிரகடனம்"வெற்றியடை அதன் இலக்கான மக்களிடத்திலிருந்து பெறப்படும் 10 லட்சம் மலேசியர்களின் கையெழுத்து திட்டம் அதற்கு முன்னதாகவே அதன் இலக்கை எட்டிவிடும் என தாம் நம்புவதாக அன்மையில் சிலாங்கூர் ஷா அலாம் மாநாட்டு மண்டபத்தி நடைபெற்ற "பிரஜைகளின் பிரகடனம்"கூட்டத்தில் உரையாற்றுகையில் மகாதீர் இவ்வாறு கூறினார்.

நமது இலக்கை நாம் முன்னதாகவே அடையும் சூழல் இருந்தாலும் மக்களிடையே தொடர்ந்து ஆதரவினை வலுப்படுத்திட மக்களி மத்தியிலான பிரச்சாரங்கள் தொடரும் என்றும் கூறிய மகாதீர் "பிரஜைகளின் பிரகடனம்"என்பது நாம் நேசிக்கும் மலேசியாவை காப்பாற்றுவதற்காக பாக்காதன் ஹராப்பான் கூட்டணியோடு கருத்துவேறுப்பாடினை ஒதுக்கிவிட்டு பல்வேறு கட்சிகளும் தலைவர்களும் கைகோர்த்த உன்னதமான பிரகடனம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் நஜிப் ஆட்சியில் ஊழலும் அதிகாரத்துவமும் தலைதூக்கியுள்ள நிலையில் பொருளாதாரமும் படும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுக்கொண்டிருக்கும் சூழலில் அதனை தடுத்து நாட்டை வளமான இலக்கிற்கு கொண்டு செல்வதே இந்த பிரகடனத்தின் முதன்மை நோக்கம் என்றார்.தொடர்ந்து பேசிய அவர் 10 லட்சம் மலேசியர்களிடம் கையெழுத்து பெறப்படும் நடவடிக்கை நல்லதொரு ஆதரவினை பெற்றிருப்பதாக கூறிய அவர் நேரடியாகவும் இணையத்தின் மூலமாகவும் இப்பிரகடனத்திற்கு கையெழுத்து பெறப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் இத்திட்டத்திற்கு அம்னோ உறுப்பினர்கள் மத்தியில் நன் வரவேற்ப்பும் ஆதரவும் கிடைத்துள்ளதாக சுட்டிக்காண்பித்த மகாதீர் இம்முயற்சி அடுத்தக்கட்ட முன்னேற்றத்தை அடைய சிறப்புக்குழுவையும் அமைத்து தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாகவும் குறிப்பிட்டார்.நாட்டின் பிரதமர் பதவியிலிருந்து நஜிப் துன் இரசாக் பதவி விலகும் வரை திட்டம் தொடருமென்றும் மகாதீர் உறுதி அளித்தார்.ஒருபோதும் இத்திட்டத்திலிருந்து பின் வாங்கப்போவதில்லை என்றும் கூறினார்.

நமது பிரகடனத்தின் ஆதரவை இன்னும் பெரிய அளவில் திரட்டி அதனை நாட்டின் பேரரசரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்ட அவர் அதற்கு நாட்டிலுள்ள இன்னும் சில அரசியல் கட்சிகளின் ஆதரவும் ஒத்துழைப்பும் மிகவும் அவசியமாவதாக சுட்டிக்காண்பித்தார்.அதேவேளையில் நாம் நமது இலக்கினை அடைய நாம் தொடர்ந்து போராடவும் பல்வேறு முயற்சிகளையும் முன்னெடுக்க வேண்டும் என உணர்த்தினார்.

நஜிப்பிற்கு மாற்றாக புதிய பிரதமரை நாடாளுமன்றத்தின் வாக்கெடுப்பின் மூலம் நாம் மேற்கொள்ள முடியும் எனும் நம்பிக்கையை விதைத்த துன் மகாதீர் அஃது சாத்தியமானால் நாம் தேர்ந்தெடுக்கும் புதிய பிரதமரை நாம் மதித்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் நினைவுறுத்தினார்.இருந்த போதிலும் புதிய பிரதமரை தேர்ந்தெடுப்பதில் நாம் கவனம் செலுத்தாமல் நஜிப்பை பதவி விலக வைக்க வேண்டிய நமது இலக்கில் நமது முழு கவனமும் இருத்தல் வேண்டும் என்றும் துன் மகாதீர் கேட்டுக்கொண்டார்.

# 18 ஆண்டுகாலப் போராட்டத்திற்குப் பின்னர் தகுதிச் சான்றிதழ்



மாநில அரசுக்கு விலாரியா குடியிருப்பாளர்கள் நன்றி

சுமார் 18 ஆண்டு காலப் போராட்டத்திற்குப் பின்னர் தாமான் மேடான், விலாரியா ஆடம்பர அடுக்குமாடி குடியிருப்பாளர்கள் பெட்டாலிங் ஜெயா மாநகர் மன்றத்திடமிருந்து தகுதிச் சான்றிதழைப் பெற்றனர்.

நீண்டகாலப் போராட்டத்திற்குப் பின்னர் தங்களுக்கு வீடு கிடைப்பதற்கு உதவி புரிந்த சிலாங்கூர் மாநில அரசுக்கு அக்குடியிருப்பாளர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

விலாரியா குடியிருப்பாளர்களிடம் வீடுகளை ஒப்படைக்கும் சடங்கு அண்மையில் மந்திரி புசார் டத்தோஸ்ரீ முகமது அஸ்மின் அலி முன்னிலையில் பெட்டாலிங் ஜெயாவில் நடைபெற்றது.

கடந்த 1998ஆம் ஆண்டில் கைவிடப்பட்ட இந்த வீடமைப்புத் திட்டத்திற்கு புத்துயீட்டுவதில் துணை நின்ற மாநில அரசு, மேம்பாட்டு நிறுவனம் உள்ளிட்ட தரப்பினருக்கு தாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்வதாக வீட்டு உரிமையாளர்களில் ஒருவரான சலிம் அகமது (வயது 51) கூறினார்.

சுமார் 65 விழுக்காட்டுக் கட்டுமானப் பணிகள் முற்றுப்பெற்ற நிலையில் அந்த வீடமைப்புத் திட்டம் திடீரென நிறுத்தப்பட்டதால் அத்திட்டத்தில் வீடு வாங்கியவர்கள் பெரும் இழப்பை எதிர்நோக்க நேர்ந்த தாக அவர் சொன்னார்.

இரு புளோக் கட்டிடங்களை உள்ளடக்கிய விலாரியா ஆடம்பர குடியிருப்பில் மொத்தம் 304 வீடுகள் உள்ளன. இந்த குடியிருப்பில் கூரையுடன் கூடிய கார் நிறுத்துமிடம், விளையாட்டு பூங்கா, நீச்சல் குளம் போன்ற வசதிகள் உள்ளன.

சுமார் ஆயிரம் சதுர அடி கொண்ட அந்த வீடுகளை தாங்கள் அப்போது 135,000 வெள்ளிக்கு வாங்கியதாக சலிம் குறிப்பிட்டார். மூன்று அறைகள் மற்றும் இரு குளியலறைகள் கொண்ட அந்த வீடுகள் தற்போது கிட்டத்தட்ட நான்கரை லட்சம் வெள்ளிக்கு விற்னையாவதாகவும அவர் சொன்னார்.



## பிரதமரின் வங்கிக் கணக்கில் பணம் மொகிடின் யாசினின் குற்றச்சாட்டை விசாரிக்க அரச ஆணையம்- மாண்புமிகு அனிப்பா மைடின்





எஸ்.ஆர்.சி. இண்டர்நேஷனல் சென். பெர். நிறுவனத்திற்குச் சொந்தமான 4 கோடியே 20 லட்சம் வெள்ளி பிரதமரின் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் சேர்க்கப்பட்டதாக முன்னாள் துணைப் பிரதமர் டான்ஸ்ரீ மொகிடின் யாசின் சுமத்தியுள்ள குற்றச்சாட்டை விசாரிப்பதற்கு அரச ஆணையம் அமைக்கப்பட வேண்டும் என்று சிப்பாங் நாடாளுமன்ற உறுப்பினர் அனிப்பா மைடின் வலியுறுத்தியுள்ளார்.

இவ்விவகாரத்தில் பிரதமர் நஜிப் துன் ரசாக் மேற்கொண்ட நடவடிக்கைகள் குற்றத் தன்மையைக் கொண்டுள்ளதாக முன்னாள் சட்டத் துறைத் தலைவர் டான்ஸ்ரீ அப்துல் கனி பட்டேல் தம்மிடம் கூறினார் என்று மொகிடின் கூறியதன் அடிப்படையில் அந்த அரச ஆணையம் அமைக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

டான்ஸ்ரீ மொகிடின் அம்பலப்படுத்திய அந்த விவகாரம் குறித்து கனி பட்டேல் இதுவரை எந்த கருத்தையும் வெளியிடாத போதிலும் இதில் ஏதோ மர்ம ம் அடங்கியுள்ளதை நம்மால் உணர முடிகிறது என்றார் அவர்.

வலுவான ஆதாரங்களும் சாட்சியங்களும் இருந்த போதிலும் பிரதமர் மீது இதுவரை எந்த குற்றச்சாட்டும் கொண்டு வரப்படவில்லை. மாறாக மொகிடின் மற்றும் கனி பட்டேலின் பதவிகள் பறிக்கப்பட்டன. குறிப்பிட்ட தரப்பினரின் தலையீடு காரணமாக பிரதமர் மீது குற்றச்சாட்டு கொண்டுவரப்படவில்லையா? என்ற கேள்வி எழுகிறது என்று அனிப்பா கூறினார்.

மொகிடினின் இந்த குற்றச்சாட்டை போலீசாரும் ஊழல் தடுப்பு ஆணையமும் விசாரிக்கும் பட்சத்தில் அந்த விசாரணை மீது பல்வேறு சந்தேகங்கள் எழுவதற்கு வாய்ப்பு ஏற்படலாம் என்று அவர் சொன்னார்.

இவ்விரு தரப்பினரும் விசாரணை மேற்கொண்டாலும் அந்த முடிவுகள் மேல் நடவடிக்கைக்காக பிரதமரின் ஆலோசனையின் பேரில் நியமிக்கப்பட்ட சட்டத் துறைத் தலைவரிடம்தான் ஒப்படைக்கப்படும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

## இலவச குடிநீர் பொதுமக்கள் முறையாக பயன்படுத்த வேண்டும்




சிலாங்கூர் அரசு அமல் வரும் இலவச குடிநீர் திட்டத்தை பொதுமக்கள் முறையாகப் பயன்படுத்திக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அத்திட்டம் நீண்ட காலத்திற்கு அமலில் இருப்பதை உறுதி செய்வதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் தேவைப்படுவதாக மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ டாக்டர் அகமது யூனுஸ் ஐரி கூறினார்.

இலவச குடிநீர் திட்டத்திற்காக மாநில அரசு பெரும் தொகையைச் செலவிட்டு வருகிறது. நீர் விவகாரத்தை சாதாரணமாக கருதி அலட்சியமாக இருந்து விட முடியாது. கடந்த காலங்களில் மாநிலத்தில் ஏற்பட்ட வறட்சி நிலையால் உண்டான சிரமத்தை நாம் அனைவரும் உணர்ந்துள்ளோம் என்றார் அவர்.

இலவச குடிநீர்த் திட்டம் நீண்ட காலத்திற்கு அமலில் இருந்து நாம் அனைவருக்கும் பயனைத் தர வேண்டுமானால் நீரின் முக்கியத்துவம் மீதான விழிப்புணர்வை நாம் கொண்டிருப்பது அவசியம் என்றார் அவர்.

சபாக் பெர்ணம், கம்போங் தெபுக் புலாயில் நீரை சிக்கனமாகப் பயன்படுத்துவது மீதான இயக்கத்தை தொடக்கி வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இலவச குடிநீர்த் திட்டத்தின் முக்கியத்துவத்தை பொதுமக்களுக்கு உணர்த்த வேண்டும் என்ற மந்திரி புசார் முகமது அஸ்மின் அலியின் கோரிக்கையின் அடிப்படையில் இந்த இயக்கம் நடத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சிலாங்கூர் மாநில மக்கள் தற்போது மாதந்தோறும் 20 கன மீட்டர் நீரை இலவசமாகப் பெற்று வருகின்றனர்.

# "சிலாங்கூர்க்கூ" வீடுகள் பிரிமா வீடுகளை விட மலிவானது

மக்களின் வருமானத்திற்கு ஏற்ப "எனது சிலாங்கூர்" திட்டத்தின் கீழ் மிகவும் மலிவான வீடுகளை சிலாங்கூர் அரசாங்கம் அமல்படுத்தி வந்தது நாம் அனைவரும் அறிந்த ஒன்று. அத்திட்டத்தை காலத்திற்கு ஏற்ப மாற்றங்களை ஏற்படுத்தி அதில் சில புதுப்பித்தலை உருவாக்கி "எனது சிலாங்கூர்"திட்டத்தின் கீழ் வெ.42,000 முதல் வெ.250,000 வரையிலான வீடுகளை சிலாங்கூர் வாழ் மக்களுக்கு வழங்கிட முன் வந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் வீடுகளின் தரம் மேம்படுத்தப்பட்டு பல்வேறு நிலைகளில் மக்களுக்கு உகர்ந்த சூழலை கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

"எனது சிலாங்கூர்" வீடமைப்புத் திட்டம் குறைந்த வறுமானம் மற்றும் நடுத்தர வர்க்கத்திற்காக பரிவுமிக்க சிலாங்கூர் அரசால் ஏற்படுத்தப்பட்டது. அவர்களை கவனித்தில் கொண்டே இஃது அமைக்கப்படுகிறது.அடுக்குமாடி வீடுகளாய் இவை கட்டப்படுவது குறிப்பிடத்தக்கது. வறுமை நிலை, நடுத்தர வர்க்கம் சிலாங்கூரில் வீடில்லா நிலைக்கு இதன் வழி தீர்வு காணப்படும் என்பது திண்ணம்.

"எனது சிலாங்கூர்" திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகள் நான்கு வகைகளை கொண்டது. இதில் முதல் மூன்று வகையிலான வீடுகள் வெ.42,000 முதல் வெ.250,000 வரையிலான விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும் வேளையில் அவ்வீடுகளை சுற்றிலும் பாதுகாப்பு அம்சங்கள், விளையாட்டு மைதானங்கள், சமூக மண்டபங்கள், மசூதி, நூல்நிலையங்கள் உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்தியிருக்கும் வேளையில் அவ்வீடுகள் 700 சதுரடியில் அமைந்திருக்கும்.

அதேவேளையில்,நான்காவது வகையிலான வீடு 1000 சதுரடியில் அமைந்திருப்பதோடு அதன் விலை வெ.220,000 முதல் வெ.250,000 வரையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் முதல் வகை வீட்டை வாங்குவோரின் மாத வருமானம் வெ.2500 முதல் வெ.3000 வரையில் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும் சூழலில் அடுத்த மூன்று நிலையிலான வீட்டை வாங்குவோரின் வருமானம் வெ.5000 முதல் வெ.8000 வரையில் இருத்தல் வேண்டும்.

வாங்கிய வீட்டை அதன் உரிமையாளர் விற்க முன் வந்தால், வீட்டை வாங்கி 5 ஆண்டுகள் கடந்த பின்னர் தான் அவர் அந்த வீட்டை விற்க முடியும் எனும் விதிமுறையும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதேவேளையில்,இத்திட்டத்தில் நிதி நிறுவனங்கள், உள்ளூர் அதிகாரிகள்,

கட்டுமானத்துறையினர், வீடு வாங்குவோரின் ஒத்துழைப்பிற்கு சிலாங்கூர் வீடமைப்பு மற்றும் சொத்து வாரியம் (LPHS) பொருப்பு வகிக்கிறது. இத்திட்டம் முழுக்க முழுக்க மாநில அரசு மற்றும் அதன் ஆட்சிக்குழு உறுப்பினர்களின் மேற்பார்வையில்தான் மேற்கொள்ளப்படும். கட்டுமானப்பணி உட்பட அனைத்து விவகாரங்களும் மிக அனுக்கமாய் கண்காணிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

"எனது சிலாங்கூர்" வீடுகளுக்கு விண்ணப்பம் செய்பவர்கள் இணையத்து மூலமும் நேரடியாக மாவட்ட அலுவலகங்களுக்கும் சென்று விண்ணப்பம் செய்யலாம். குறிப்பாக கிராமப்புறங்கள் மற்றும் புறநகர் வாசிகள் இந்த "எனது சிலாங்கூர்" வீடுகளுக்கு விண்ணப்பம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படும் வேளையில் இணையத்தை காட்டிலும் நேரடியாக அதன் அலுவலகத்தில் சென்று விண்ணப்பம் செய்வது ஊக்குவிக்கப்படுகிறது. இதன் வழி இத்திட்டம் குறித்து மேலும் பல தகவல்களை அவர்கள் பெற முடியும். மக்களுக்காக உருவாக்கப்பட்டிருக்கும் இத்திட்டத்திற்கு நன் வரவேற்பு கிடைத்துள்ள நிலையில் இந்தியர்கள் உடனடியாக இத்திட்டத்தில் பதிந்துக்கொள்ள வேண்டும்.





டத்தோ இஸ்கண்டர் அப்துல் சமாட்

# சிலாங்கூர் அரசின் கல்விக் கொள்கையை சுல்தான் பாராட்டினார்




ஆசிய வட்டாரத்தில் சிலாங்கூர் மாநிலம் கல்வியில் சிறந்த இலக்கை அடைய சிலாங்கூர் மாநில அரசு மேற்கொள்ளும் கல்வி கொள்கையை பாராட்டிய மாட்சிமை தங்கிய சிலாங்கூர் சுல்தான் சராபுடின் இட்ரிஸ் ஷா மாநில அரசின் இத்திட்டத்தை வரவேற்பதாக குறிப்பிட்டார். அதேவேளையில் மாநில அரசு மேற்கொள்ளும் கல்வி சார்புடைய இலக்கினில் ஆன்மிக கூறுகளையும் இணைத்துக் கொள்ளுமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

கல்வியில் சிறந்து விளங்க மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நடவடிக்கையும் விவேகமாகவும் ஆற்றல் மிக்கதாகவும் இருத்தல் வேண்டும் என நினைவுறுத்திய சுல்தான், பேராசியர் ஹேரி லூயிஸ் (HARRY LEWIS) கூறுவது போல அமலாக்கப்படும் திட்டங்களும் கொள்கைகளும் "உயிர்ப்பு இல்லாத சாதனைகளாய்" அமைந்து விடக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து குறிப்பிட்ட சுல்தான் பொறுப்பு,நாகரிகம் மிக்க புதிய தலைமுறையை உருவாக்குவதில் கவனம் செலுத்திடும் அதேவேளையில் தனித்திறன்,நல்தோற்றம்,கொள்கை கல்வி,நன்னெறிப்பண்பு ஆகியவை இன்றியமையாதவை என்பதை ஒருங்கிணைந்த கல்விக் கோட்பாடு உணர்த்துவதாக இருத்தல் வேண்டும் என்றும் பகிர்ந்துக்கொண்டார். அதேவேளையில், சிலாங்கூர் மாநிலம் தொழில்துறை கல்வியை விரிவுப்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

சிலாங்கூர் மாநிலம் தொழில்துறை மாநிலம் எனும் ரீதியில் அதிகமான தொழில் திறன் வல்லவர்களை உருவாக்க தொழில்திறன் கல்வியை மேம்படுத்தவும் அதனை விரிவாக்கமும் செய்ய வேண்டும் எனகேட்டுக்கொண்டார்.மந்திரி பெசார் டத்தோஸ்ரீ அஸ்மின் அலியின் தலைமையில் திறன்பட செயல்படும் சிலாங்கூர் மாநில அரசின் கல்வி கொள்கையை மாட்சிமை தங்கிய சிலாங்கூர் சுல்தான் வெகுவாகப் பாராட்டினார்.

# டத்தோ ஸ்ரீ அஸ்மின் அலியின் தலைமையிலான



## சிலாங்கூர் அரசாங்கத்தின் திட்டங்கள் மற்றும் சேவைகளையும் ஆட்சிக்குழு உறுப்பினர் கணபதிராவ் விளக்குகிறார்!!

selangorku

*சிலாங்கூர் அரசாங்கம் மக்கள நலனுக்காகவும் அவர்களின் மேம்பாடு மற்று மேற்கொள்ளப்பட்ட சேவை அதற்கான நிதி ஒதுக்கீடு கடந்த கால தேசிய மு விட அதிகம் - கணபதிராவ்*

சிலாங்கூர் மாநில அரசாங்கம் கடந்த 2008ஆம் ஆண்டு முதல் பல்வேறு திட்டங்களையும் அமலாக்கங்களையும் சிலாங்கூர் வாழ் மக்களின் நலன் கருதி அதன் விவேகமான மற்றும் ஆக்கப்பூர்வ சேவையினை வழங்கி வருவதாக வறுமை ஒழிப்புத் திட்டம்,பரிவு மிக்க அரசாங்கம் மற்றும் தோட்டப்புற தொழிலாளர்களின் மாநில அரசின் நிரந்திர செயலவைத் தலைவர் ஆகிய பொருப்புக்கள் உள்ளடங்கிய ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் தெரிவித்தார்.

### வறுமை ஒழிப்புத் திட்டம்.(வெ.140 லட்சம்)

சிலாங்கூரில் வாழ் மக்களிடையே வறுமை ஆட்கொள்ளாமல் இருப்பதை உறுதி செய்யவும் அக்கொடுமையிலிருந்து அவர்கள் விடுப்படவும் பரிவு மிக்க சிலாங்கூர் அரசாங்கம் வறுமை ஒழிப்புத் திட்டத்தை அமல்படுத்தி அதன் வழி சிலாங்கூரி மாநிலத்தில் வறுமையை துடைத்தொழிக்க பெரும் பங்காற்றி வருவதாக கூறினார்.இத்திட்டத்தை செம்மையாக செய்திட வெ.140 லட்சத்தை சிலாங்கூரி அரசு ஒதுக்கியிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

### செயல்த் திட்டம் (BLUE PRINT)

இத்திட்டத்திற்காக மாநில அரசு வெ.20 லட்சத்தை ஒதுக்கியுள்ள நிலையில்,இத்திட்டத்தின் கீழ் வெ.1500க்கும் குறைவான வருமானத்தை பெறும் வணிகர்கள் லாபம் அடைய வாய்ப்பு இருப்பதாக கணபதிராவ் குறிப்பிட்டார். குறைவான வருமானம் பெறும் வணிகர்கள் தங்களின் வியபாரத்தை விரிவாக்கம் செய்யவும் வியபாரத்திற்கு தேவையான முழுமையான பொருட்களை கொண்டிருக்கும் சூழலை ஏர்படுத்துவதற்காக இத்திட்டம் உருவாக்கப்பட்டது. அம்மாதிரியா வியபாரிகளுக்கு வியபாரம் தொடர்பிலான தளவாடம் மற்றும் தேவையான பொருட்களை அவர்கள் இத்திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.இச்சே வையை பெற அவர்கள் நில அலுவலகத்தில் விண்ணம் செய்ய வேண்டும். அதேவேளையி,கிராமத்து தலைவரின் பரிந்துரையும் இங்கு அவசியமாகிறது என்றார்.

### இன்பென்ஸ் அனைத்துலக் கல்லூரி. (INPENS)

தொழில்கல்வி மற்று நிபுணத்துவம் கல்வியில் புதியதொரு இலக்கை அடைய வேண்டி மாநில அரசாங்கம் வெ.40 லட்சத்தில் இன்பென்ஸ் அனைத்துலக் கல்லூரியில் இணைந்து கல்வி கற்கும் வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. சிலாங்கூர் வாசிகளான 16 வயதை எட்டியவர் இக்கல்லூரியில் சேர்ந்து இக்கல்வியை தொடரலாம். கோலாசிலங்கூர் பகுதியில் அமைந்திருக்கும் இக்கல்லூரில் கல்வியை மேற்கொள்பவர்களுக்கு இலவசமாக மூன்று வேளை உணவு, தங்கும் வசதியுடன் செலவினத்திற்காகவும் வெ.150 ஒவ்வொரு மாதமும் வழங்கப்படுகிறது.

### பண்டிகைக்கால பற்றுச்சீட்டு

பண்டிகைக்காலங்களில் மக்களின் சுமையை குறைப்பதற்காக சிலாங்கூர் அரசாங்கம் பண்டிகைக்கால பற்றுச்சீட்டினை அறிமுகம் செய்தது. கடந்தக்காலங்களில் நோன்புப்பெருநாள், சீனப்புத்தாண்டு மற்றும் தீபாவளி காலங்களில் ஹம்பர் கொடுக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது அஃது மாற்றி அமைக்கப்பட்டு பற்றுச்சீட்டாக வழங்கப்படுவதாக கணபதிராவ் தெரிவித்தார். ஒவ்வொரு பண்டிகைக்காலங்களிலும் வெ.100 பற்றுச்சீட்டு வழங்கப்படுவதாக கூறிய அவர் இத்திட்டத்திற்காக வெ.80 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் மீண்டும் பள்ளிக்குப் போகலாம் எனும் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு பற்றுச்சீட்டு அல்லது புத்தகப் பையும் வழங்கப்படுவதாக கூறிய அவர் இச்சேவை மாநில பொருளாதார திட்டமிடல் பிரிவால் வழங்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

### பரிவு மிக்க அரசாங்கம்

வெ.1500க்கும் குறைவான வருமான உள்ளவர்கள், சொந்த நிலத்தில் வீடு கட்டி வசிப்பவர்கள், ஏழ்மையில் உள்ளவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் 50 வயதை கடந்தவர்கள் இத்திட்டம் வழி நன்மை பெறலாம். இத்திட்டத்தின் கீழ் பழுதான வீட்டை சீர் செய்வதற்கு வெ.20,000மும் இரண்டு அறைகள் கொண்ட புதிய வீட்டை காட்டுவதற்கு வெ.25,000 முதலும் 3 அறைகள் கொண்ட புதிய் வீடுகள் கட்டுவதற்கு வெ.35,000 மும் என வகைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இத்திட்டத்திற்காக வெ.10 லட்சத்தை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்தில் தங்களை இணைத்துக்கொள்ள பொது மக்களி முழு விவரங்களுடன் நில அலுவலகத்தில் தங்களின் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.



### அரசு சார்பற்ற இயக்கங்களுக்கு மானியம்

சிலாங்கூரில் இயங்கி வரும் அரசு சார்பற்ற இயக்கங்கள் தொடர்ந்து அதன் சேவைகளை செய்து வரவும் இயக்கத்தை சிறந்த இலக்கிற்கு கொண்டு செல்லவும் வெ.5 லட்சத்தில் அவ்வியக்கங்களுக்கு அரசு மானியம் கிடைத்திட இத்திட்டம் உருவாக்கப்பட்டது என்றார்.இத்திட்டத்தின் வழி ஒவ்வொரு ஆண்டும் சிலாங்கூரில் இயங்கும் இயக்கங்கள் குறைந்தது வெ.5000 பெறுவதற்கு வாய்ப்பு உள்ளது. விண்ணப்பம் செய்பவர்கள் முறையான அரசு பதிவு சான்றிதழ்,வங்கி கணக்குடன் அவர்களின் செயல்திட்டத்தையும் சமர்ப்பிக்க வேண்டும் என கணபதிராவ் தெளிவுப்படுத்தினார்.

### தமிழ்ப்பள்ளிகளுக்கு மானியம்

நாட்டில் அதிகமான தமிழ்ப்பள்ளிகளை கொண்ட மாநிலமாக விளங்கிடும் சிலாங்கூர் மாநில தமிழ்பப்ள்ளிகளின் செயல்பாட்டினை மேம்படுத்துவதற்காகவும் பள்ளியின் கற்றல் கற்பித்தலுக்கு பெரும் பங்காற்றவும் வெ.40 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாக கூறிய அவர் மாநில கல்வி பிரிவின் ஆட்சிக்குழு உறுப்பினராக பதவி வகிக்கும் மாண்புமிகு நிக் நஸ்மி அவர்களோடு கலந்துப்பேசி இந்நிதி பகிர்ந்தளிக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

### தோட்டப்புறத் தொழிலாளர்களுக்கு

சிலாங்கூர்மாநில வளர்ச்சியில் தோட்டத்தொழிலாளர்களி ன் பங்களிப்பும் கவனத்தில் கொள்ள வேண்டியதாய் அமைந்திருப்பதாக கூறிய கணபதிராவ் பொங்கல், தீபாவளி,தைப்பூசம்.தன்மு னைப்பு பட்டறை உட்பட அவர்களுக்கான பயிலரங்குகளுக்காக மாநில அரசு வெ.5 லட்சத்தை ஒதுக்கியிருப்பதாகவும் அதன் வழி தோட்டத்தொழிலாளரக்ள் தொடர் நன்மையினை பெற்று வருவதாகவும் குறிப்பிட்டார்.

### மாநில சமயக்குழு.

மாநிலத்தில் சமயக்குழு பொருப்பாளர்களை நியமித்து அதன் வழி ஒவ்வொரு சமயத்தின் வளர்ச்சிக்கும் மேபாட்டிற்கும் அதேவேளையில் அவர்களின் செயல்பாட்டிற்கும் வெ.17.6 லட்சத்தை மாநில அரசு ஒதுக்கியிருப்பதாக தெரிவித்தார்.இச்சமயக்குழு பொருப்பாளர்களாய் இந்து மதம் மற்றும் சீக் சமய விவகாரங்களுக்கு தாம் பொருப்பேற்கும் வேளையில், பௌத்த சமயத்திற்கு டத்தோ தேங் சாங் கின் அவர்களும் கிருஸ்துவ சமயத்திற்கு எலிசபத் வோங் அவர்களும் பொருப்பேற்றிருப்பதாக கூறினார்.மேலும்,ஆலயங்க ளை கட்டுவது,முறையற்ற இடங்களில் கட்டப்பட்ட ஆலயங்களை அகற்றுவது போன்றவற்றில் தான் தீவிர கவனம் செலுத்துவதாகவும் கூறினார்.

### தோட்டப் பாட்டாளி பிள்ளைகளின் நல்வாழ்வு

தோட்டப் பாட்டாளி வீட்டுப்பிள்ளைகளின் நல் வாழ்வினை கருத்தில் கொண்ட சிலாங்கூர் அரசாங்கம் வெ.10 லட்சத்தில் தோட்டப் பாட்டாளி வீட்டுப்பிள்ளைகளின் கல்வியை முன்னிறுத்தி மேற்கொண்டு வருகிறது.யு.பி.எஸ்.ஆர்.தேர் வில் சிறந்த அடைவு நிலையை எட்டும் மாணவர்கள் அதற்கு காரணமான 5 ஆசிரியர்கள் மற்றும் 3 பள்ளிகள் ஊக்குவிக்கப்படுகிறது.

அதேவேளையில்,கல்லூரியி ல் பயிலும் மாணாவர்களுக்கு வெ.5000 வழங்கப்படுகிறது. இஃது ஒரு முறைதான் வழங்கப்படும் என கூறிய கணபதிராவ் பள்ளி பேருந்துக் கட்டணமாக வெ.300 தகுதி பெற்ற மாணவர்களுக்கு வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

சிலாங்கூர் இன்று தமிழ்ப்பதிப்பிற்காக மாநில அரசின் திட்டங்கள் மற்றும் அதன் சேவையை பகிர்ந்துக்கொண்ட ஆட்சிக்குழு உறுப்பினர் கணபதிராவ் அவர்களிடம் இத்திட்டங்கள் வாயிலாக நன்மை அடைந்த எண்ணிகை தொடர்பில் வினவிய போது அவர் கொடுத்த பதில்களை அடுத்த பதிப்பில் காணலாம்.அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகள் உங்கள் முன்:

1.இதுவரை எத்தனை ஆலயங்களுக்கு நிலம் வழங்கப்பட்டுள்ளது?

2.எத்தனை தமிழ்ப்பள்ளிகளுக்கு நிலம் வழங்கப்பட்டுள்ளது?

3.பரிவு மிக்க அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் இதுவரை எத்தனை இந்தியர்களுக்கு புதிய வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது?எத்தனை வீடுகள் புதுப்பிக்கப்பட்டுள்ளது?

4. இதுவரை மாநில அரசாங்கம் எத்தனை இந்தியர்களுக்கு நிலம் வழங்கியுள்ளது?

5. கல்லூரியில் பயிலும் தோட்டப் பாட்டாளிகளின் பிள்ளைகளில் எத்தனை மாணவர்களுக்கு வெ.5000 கல்வி உதவி வழங்கப்பட்டிருக்கிறது?

இந்த கேள்விகளுக்கான் ஆட்சிக்குழு உறுப்பினர் கணபதிராவ் அவர்களின் பதில் அடுத்த பதிப்பில் வெளிவரும் என்பது குறிப்பிடத்தக்கது.



மலேசிய வாழ் இந்துக்களுக்கு சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்



மாண்புமிகு கணபதி ராவ்
மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்

சித்திரைப் புத்தாண்டினை முன்னிட்டு சிலாங்கூர் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் மலேசிய வாழ் இந்துக்களுக்கு தனது வாழ்த்தினை தெரிவித்துக்கொண்டார். சித்திரைப் புத்தாண்டு சிந்தனையாக அவர் கடந்தாண்டு ஏப்ரலில் விதிக்கப்பட்ட சேவை வரி வசூல் (ஜி.எஸ்.டி) ஓராண்டை எட்டியிருப்பதை சுட்டிக்காண்பித்தார்.விதிக்கப்பட்ட ஜி.எஸ்.டி.யால் நாடு வளம் பெறும்,பொருளாதாரம் செழிக்கும்,பொருட்களின் விலை குறையும் என அம்னோ அமைச்சர்களும் அம்னோ தலைவர்களும் தேசிய முன்னணி தலைவர்களும் முழங்கியதை நினைவுக்கூர்ந்த அவர் ஜி.எச்.டி.யால் பொருளாதார சுமை அதிகரித்து மலேசிய மக்கள் கடும் சிரமத்தையும் வேதனையையும் அனுபவிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அதேவேளையில்,ஜி.எஸ்.டி.நாட்டின் பொருளாதாரத்தஒ படும் பாதாளத்தில் தள்ளியிருப்பதையும் சுட்டிக்காண்பித்த கணபதிராவ் தேசிய முன்னணி அரசாங்கத்தின் இத்திட்டத்தால் மக்கள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர் என்பதுதான் நடப்பு உண்மை என்றார்.அதேவேளையில்,நாட்டில் ஆளும் அரசாங்கம் மக்களிடையே அதன் நம்பிக்கையையும் நேர்மையையும் இழந்துள்ளது.இங்கு ஊழலும் அராஜகமும் தலைத்தூக்கியுள்ளது. ஒரே மலேசியா மேம்பாட்டு திட்டம் (1MDB),வெ.2.6 பிலியன் விவகாரம் உட்பட பல்வேறு ஊழல்களும் மோசடிகளும் நாளுக்கு நாள் அறங்கேறிக்கொண்டுதான் இருக்கிறது.

இவ்வேளையில்,இந்த சித்திரப் புத்தாண்டோடு மலேசியாவை ஆட்கொண்டிருந்த வேதனைகளும் துயரங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என நாம் நம்புவோம்.நாட்டின் அமைதிக்கும் சுபிட்சத்திற்கு இறைவனிடம் பிராத்தனை செய்துக் கொள்வோம் நாட்டில் அனைத்து அரசியல் சிக்கல்களும் சூரியனை கண்ட பனிப்போல விலகி நாட்டிற்கும் நாட்டும் மக்களுக்கும் நன்மை பயக்கட்டும்.நாட்டு மக்களிடையே வளமும் செழிப்பும் மேலோங்கு சந்தோசமும் இன்பமும் உயிப்பிக்கட்டும் என இப்புத்தாண்டில் இறவனை நாம் வேண்டிக்கொள்வோம்.

இவ்வாண்டு நாட்டில் அரசியல் ரீதியில் மாபெரும் உருமாற்றம் உருவான ஆண்டாக அரசியல் வட்டாரத்தில் வர்ணிக்கப்படுகிறது.நாட்டின் முன்னால் பிரதமர் துன் மகாதீர்,முன்னால் துணைப்பிரதமர் டான்ஸ்ரீ முகிடின் யாசின்,மாட் சாபு,சிலாங்கூர் மாநில மந்திரி பெசார் டத்தோஸ்ரீ அஸ்மின் அலி,லிம் கிட் சியாங் மற்றும் டத்தோ அம்பிகா போன்றவர்கள் ஒரே இலக்கோடு பயணிப்பது மலேசிய அரசியல் மட்டுமின்றி மலேசியாவையும் சிறந்த இலக்கிற்கு கொண்டு செல்லும் ஆண்டாக இவ்வாண்டும் திகழ்வதாக அவர் மேலும் கூறினார்.

அரசியலில் பல்வேறு துருவங்களாய் இருந்த இவர்கள் அனைவரும் இணைந்து போராட்டத்தை மேற்கொள்ளவது இதுவே முதன்முறை.இஃது மலேசியாவை சிறந்த நிலைக்கு கொண்டு செல்லும் என்பதில் துளியும் ஐயமில்லை என கூறிய கணபதிராவ் இந்துக்களின் புத்தாண்டான சித்திரைப் புத்தாண்டில் மாபெரும் அரசியல் மாற்றத்தை உருவாக்கிட நமது ஒவ்வொருவரின் பிராத்தனையும் முதன்மைப்படுத்தும் என்பதில் துளியும் சந்தேகமில்லை என்று தனது நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.

மீண்டும் தனது சிலாங்கூர் மற்றும் மலேசிய வாழ் இந்துக்களுக்கு தனது சித்திரைப் புத்தாண்டு வாழ்த்தினை தெரிவித்துக் கொண்ட மாநில ஆட்சிக்குழ் உறுப்பினர் வீ.கணபதிராவ் நாம் ஒற்றுமையாக செயல்ப்பட்டு மலேசியாவை பாதுகாக்கும் அதேவேளையில் ஒற்றுமையும் புரிந்துணர்வும் நம்மவர்களிடையே மேலோங்கட்டும் என அவர் தனது சித்திரைப் புத்தாண்டு வாழ்த்து சிந்தனையில் தெரிவித்தார்.



# இந்திய நாட்டு சுற்றுப்பயணிகளை கவர்வதற்கு சிலாங்கூர் சுற்றுலாத்துறை இலக்கு

சிலாங்கூர் மாநிலத்திற்கு அதிகமான சுற்றுப்பயணிகளை வரவேற்க பல்வேறு விவேகமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் அதேவேளையில் இந்திய நாட்டு சுற்றுப்பயணிகளை அதிகமாய் கவர்வதற்கான நடவடிக்கையினையும் சிலாங்கூர் சுற்றுலா துறை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மாநிலத்தின் சுற்றுலாத்துறையின் ஆட்சிக்குழு உறுப்பினரான மாண்புமிகு எலிசபெத் வோங் அவர்களின் தலைமையில் சிலாங்கூர் மாநிலத்திற்கு அதிகமான இந்திய சுற்றுப்பயணிகளை கவர்வதை இலக்காக கொண்டு அன்மையில் சிலாங்கூர் மாநிலம் மற்றும் இந்திய நாட்டுக்கான இருவழி தொடர்பினை வலுப்படுத்தும் நிகழ்வு நடந்தேறியது.இந்த இரு வழி தொடர்பில் வியபாரம் மற்றும் அரசு சார்ந்த அனுகுமுறை,புரிந்துணர்வும் பேச்சுவார்த்தையும் மேற்கொள்ளப்பட்டது.

இந்த இரு வழி புரிந்துணர்வின் கீழ் சிலாங்கூர் மாநிலத்திற்கு அதிகமான இந்திய நாட்டு சுற்றுப்பயணிகளை கவர்வதோடு இஃது ஓர் நீண்டக்கால திட்டமாகவும் உயிர்ப்பிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.சிலாங்கூர் மாநிலத்திற்கு வெளிநாட்டிலிருந்து சுற்றுப்பயணிகளாய் வருகை அளித்தவர்களில் இந்திய நாட்டு சுற்றுப்பயணிகளின் எண்ணிக்கை ஐந்தாவது இடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.இதுவரை இந்திய நாட்டிலிருந்து சிலாங்கூர் மாநிலத்திற்கு வருகை அளித்தவர்களின் எண்ணிக்கை 170,912 சுற்றுப்பயணிகள் என்பது ஆய்வில் தெரிய வந்துள்ளது.

தொடர்ந்து சிலாங்கூர் மாநிலத்தை இந்திய சுற்றுப்பயணிகள் மத்தியில் விளம்பரம் படுத்துவதற்கான பல்வேறு முயற்சிகளும் நடவடிக்கைகளையும் மாநில சுற்றுலாத்துறை மேற்கொண்டு வரும் அதேவேளையில் சிலாங்கூர் மாநிலத்தை அனைத்துல ரீதியில் அறிமுகம் செய்து வருவதிலும் தனி கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.சிலாங்கூர் மாநிலத்திற்கு வருகை தரும் இந்திய நாட்டு சுற்றுப்பயணிகளின் முதன்மை சுற்றுலா தலங்களில் ஒன்றாக பத்து கேவ்,சன்வே லெகூன்,ஐ-சிட்டி,எப்1 கார் பந்தைய தலம் போன்றவைகள் முதன்மை வகிப்பது குறிப்பிடத்தக்கது.



# சிலாங்கூரில் பாதுகாக்கப்பட்ட காடுகள் 250,000 எக்டரை எட்டியது

சிலாங்கூரில் பாதுகாக்கப்பட்ட வனங்கள் (காடுகள்) அதன் பரப்பளவினை விரிவுப்படுத்தியுள்ளது. கடந்தக்காலத்தை காட்டிலும் நடப்பில் சிலாங்கூரி ஒதுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட வனங்களின் பரப்பளவு 250,000 எக்டரை எட்டியதாக சுற்றுலா,சுற்றுச்சூழல்,பசுமை,தொழில் நுட்பம் மற்றும் பயனீட்டாளர் விவகார ஆட்சிக்குழ் உறுப்பினர் எலிசபெத் வோங் கூறினார். இக்காடுகள் பதிவு செய்யப்பட்ட காடுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

மாநில அரசாங்கம் எந்தவொரு காட்டையும் அழிக்கவில்லை என்றும் விவரித்த அவர் அவ்வாறு அழிக்க நேரிட்டால் அதற்காக வெளிப்படையான பிரச்சாரத்தை தாம் மேற்கொள்வேன் என அறிவித்த எலிசபெத் வொங் வனங்கள் அழிக்கப்படும்போது அதற்கு ஈடான காடுகள் உருவாக்கப்படுவதையும் உறுதி செய்வேன் என்றார்.அதேவேளையில் புதிய வனங்களை உருவாக்குவதையும் ஊக்குவிப்பதாக குறிப்பிட்டார்.

சிலாங்கூர் மாநில அரசு மக்களின் நலனுக்கும் வசதிக்காகவும் மட்டுமே காடுகளை அழித்திட அனுமதிக் கொடுப்பதாக சுட்டிக்காண்பித்த அவர் சாலை,கட்டுமானப்பணி,குடிநீர் குழாய்,மின்சார வசதிக்கு மற்றும் எரிவாயு போன்ற அத்தியாவசிய தேவைகளுக்காக  மட்டுமே காடுகள் அழிக்கப்பட்டு மேம்பாடு மட்டும் மக்களுக்கான வளர்ச்சி திட்டங்களுக்கு அஃது பயன்படுத்தப்படுவதாக தெரிவித்தார்.

இதற்கிடையில் காடுகளை அனுமதியின்றி அழிப்பதை வன்மையாக கண்டிப்பதாக கூறிய அவர் அனுமதியின்றி காடுகளை அழிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் அவர்களின் விவரங்களை வெளியிடவும் ஆவணம் செய்யப்பட வேண்டும் என்றார்.அதேவேளையில் அவர்கள் மீது பொது விசாரணையையும் மேற்கொள்ள வேண்டும் என்றார்.

சிலாங்கூரில் காடுகள் அழிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யும் விதமாக சிலாங்கூர் அரசு காடுகளை ஒட்டிய மேம்பாட்டுத்திட்டங்களில் தனி கவனம் செலுத்துவதோடு நெடுஞ்சாலைகளும் காடுகளை ஒட்டியவாறே அமைந்திருப்பதாக குறிப்பிட்டார்.மேலும்,நாட்டில் வனங்களை பாதுகாப்பதில் சிலாங்கூர் அரசு மட்டுமே அதில் தனி கவனம் செலுத்தி வருவதாகவும் அதனை மக்களின் பார்வைக்கு வைத்திருப்பதோடு மட்டுமின்றி வனங்களை பாதுகாப்பதில் மக்களையும் இணைத்திருப்பது சிலாங்கூர் அரசின் தனித்துவமான செயல்பாடு என்றும் பெருமிதமாய் கூறினார்.



HIJRAH SELANGOR

# சிலாங்கூர் ஹிஜ்ரா: திட்டம்

சிலாங்கூர் வாழ் மக்கள் தங்களை பொருளாதார நிலையில் உயர்த்திக் கொள்ளவும் வியபாரத்தை விரிவாக்கம் செய்துக்கொள்ளவும் சுலபமான முறையினை கையாளவே மாநில அரசு ஹிஜ்ரா: திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.
வியாபாரிக்களுக்கு சுமையளிக்காத,விரைவான,எளிதான முதலீட்டு திட்டம். இதுதான் தற்போதைய சிலாங்கூர் மாநில வியாபாரிகளின் முதல் தேர்வாகும்.

- ✓ வியாபாரத்திற்கு சிறிய தொகை கடனுதவி, சுமை இல்லாத கடனை திரும்ப செலுத்தும் சலுகை மற்றும் சேமிப்பு அடிப்படையிலான கடனுதவி திட்டம்.
- ✓ மாநில அரசாங்கத்தில் அமைந்துள்ள சிலாங்கூர் மக்கள் பொருளாதாரத்தின் (MES) திட்டத்தில் பின்வரும் நோக்கங்கள் கொண்ட ஒரு செயல் முறைதிட்டம்.
- ✓ சுமையளிக்காத,விரைவான,எளிதான கூடுதல் முதலீடு வழங்குதல்.
- ✓ விரைவான,எளிதான கூடுதல் முதலீடு வழங்குதல், மற்றும் வெறும் பத்து நாட்களுக்குள் எந்த ஒரு சொத்தையும் அடமானம் கோராமல் வழங்கப்படும் வியாபார கடனுதவி.
- ✓ சிறுவர்த்தகர்கள்,வியாபாரிகள்,மத்தியில் சேமிக்கும் தன்மையை ஏற்படுத்துதல்,
- ✓ வட்டியாக வாரவாரம் திரும்ப செலுத்தும் தொகையில் ஒரு பங்கு சேமிப்பாக உங்களை வந்தடையும்.
- ✓ நடைமுறைப்படுத்தக்கூடிய வர்த்தகத் தொடர்பை உருவாக்குதல்.
- ✓ எங்களிடம் கடனுதவியை பெற்றவர்களுடன் இணைந்து வியாபாரத்தை பெறுக்க வர்த்தகத் தொடர்பு ஏற்படுத்துவது.
- ✓ திறன்,துடிப்பு,ஆற்றல்கொண்ட தூரநோக்கு அடிப்படையிலான தொழில் முனைவர்களை உருவாக்குதல்.

## அதிகப்படியாக

### பின்வரும் வாய்ப்பை வழங்கக் கூடிய ஒரே நிலையம்:

A. மூன்று சேவைகள் கொண்ட ஒரு வர்த்தக முறை:-

கடனுதவி + சேமிப்பு + முதலீடு

B. திறமையானவருக்கு மற்றும் புதியோருக்கும் ஆலோசனை சேவைகள்.

C. வர்த்தக நிர்வாக முறையை நிர்ணயிக்கும் சேவைகள்.

D. கடனுதவிக்கான தக்கா:புல் காப்புறுதி நிர்வகிப்பு.

E. நீண்டகால அடிப்படையிலான சிலாங்கூர் ஹிஜ்ரா: திட்டம்.

### தகுதி விதிமுறைகள்:

- ➢ 18 வயது முதல் 60 வயதான மலேசிய குடிமக்களாக இருத்தல்
- ➢ வியாபாரத்திற்கு ஏற்ற இடம் இருத்தல் அவசியம்
- ➢ வர்த்தக உரிமம் வைத்திருக்க வேண்டும்
- ➢ அரசு, நிதிநிறுவனங்கள் மற்றும் வங்கிகளிலோ கருப்புபட்டியலில் பதிவாகி இருக்கக்கூடாது.
- ➢ வியாபாரத்தில் முழுநேர ஈடுபாடு

### சிலாங்கூர் ஹிஜ்ரா: திட்டம்:

- ❖ ஒரு திட்டத்தில் ஒரு கடனுதவி மட்டுமே வழங்கப்படும்.
- ❖ ஒரு குடும்பத்திற்கு ஒரு கடனுதவி மட்டுமே வழங்கப்படும்.
- ❖ ஒரு திட்டத்தில் ஒரு கூட்டுறவுக்கான ஒரு கடனுதவி மட்டுமே வழங்கப்படும்.

### தகுதிவிதிமுறைகள்

- ➢ 18 வயதுமுதல் 60 வயதான மலேசிய குடிமக்களாக இருத்தல்.
- ➢ வியாபாரத்திற்கு ஏற்ற இடம் இருத்தல் அவசியம்.
- ➢ வர்த்தக உரிமம் வைத்திருக்க வேண்டும்
- ➢ அரசு, நிதிநிறுவனங்கள் மற்றும் வங்கிகளிலோ கருப்புபட்டியலில் பதிவாகி இருக்கக்கூடாது
- ➢ வியாபாரத்தில் முழுநேர ஈடுபாடு

### சிலாங்கூர் ஹிஜ்ரா: திட்டம்

- ❖ ஒரு திட்டத்தில் ஒரு கடனுதவி மட்டுமே வழங்கப்படும்
- ❖ ஒரு குடும்பத்திற்கு ஒரு கடனுதவி மட்டுமே வழங்கப்படும்.
- ❖ ஒரு திட்டத்தில் ஒரு கூட்டுறவுக்கான ஒரு கடனுதவி மட்டுமே வழங்கப்படும்

### சிலாங்கூர் ஹிஜ்ரா: திட்டத்தின் அட்டவணை.

சிலாங்கூர் ஹிஜ்ரா: திட்டத்தில் பின்வரும் அட்டவணையின்படி கடனுதவி வழங்கப்படுகிறது

| திட்டம்வகை | கடனுதவி | கடன் செலுத்தும் காலவரையறை | குறிப்பு |
|---|---|---|---|
| முதலாவது திட்டம் | RM 1000-RM5000 | 25 வாரங்கள் (6 மாதங்கள்) 50வாரங்கள் (12மாதங்கள்) 100வாரங்கள் (24மாதங்கள்) 150 வாரங்கள் 36 மாதங்கள் | தகுதியுள்ள கடனுதவி பெறுவோறுக்காகவழங்கப்படும் வாய்ப்பு |
| 2வதுதிட்டம் | RM 6,000-RM10,000 | 25 வாரங்கள் (6 மாதங்கள்) 50வாரங்கள் (12மாதங்கள்) 100வாரங்கள் (24மாதங்கள்) 150 வாரங்கள் 36 மாதங்கள் | |
| 3வதுதிட்டம் | RM 15,000-RM20,000 | 25 வாரங்கள் (6 மாதங்கள்) 50வாரங்கள் (12மாதங்கள்) 100வாரங்கள் (24மாதங்கள்) 150 வாரங்கள் 36 மாதங்கள் | திருப்திகரமான முறையில் ஒழுங்காக முதல் சுற்றுகடனுதவியை செழுத்தி முடிந்தோர்கே இந்ததிட்டத்தில் வாய்ப்பு வழங்கப்படும். |
| 4வதுதிட்டம் | RM 30,000-RM 50,000 | 25 வாரங்கள் (6 மாதங்கள்) 50வாரங்கள் (12மாதங்கள்) 100வாரங்கள் (24மாதங்கள்) 150 வாரங்கள் 36 மாதங்கள் | |



சிலாங்கூர் ஹிஜ்ரா: திட்டத்தின் விண்ணப்ப பாரங்களை ஒவ்வொரு சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்றங்களின் சேவை மையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.அதேவேளையில் சிலாங்கூர் மாநில ஹிஜ்ரா: தலைமையகமான Tingkat 2,Bangunan Sultan Salahudin Abdul Aziz Shah,40000 Shah Alam,Selangor Darul Ehsan அலுவலகத்தையும் தொடர்புக்கொள்ளலாம்.அதேவேளையில் 03-55212458,03-55191692 www.hijrahselangor.my எனும் வழியும் தகவல் பெறலாம்.

# நாட்டின் நிலையற்ற கல்வி கொள்கையால் மாணவர்கள் பாதிப்பு - மாண்புமிகு நிக் நஸ்மி அமாட்

நாட்டின் நிலையற்ற கல்வி கொள்கையால் பள்ளி மாணவர்களும் உயர்க்கல்வி மாணவர்களும் பெரும் பாதிப்படைவதோடு முறையான கல்வி இலக்கினை நோக்கி முன்னேற முடியாமல் அவர்கள் தவிப்பதாகவும் சிலாங்கூர் மாநில கல்வி பிரிவின் ஆட்சிக்குழு உறுப்பினர் மாண்புமிகு நிக் நஸ்மி நிக் அமாட் வருத்தமுடன் தெரிவித்தார்.

நாட்டின் கல்வி கொள்கை நிலையற்ற தன்மையில் இருப்பதோடு அதில் அடிக்கடி மேற்கொள்ளப்படும் மாற்றங்களும் சூழல்களும் மாணவர்களை குழப்புவதோடு தோல்வியை நோக்கியும் பயணிக்க வைப்பதாக அவர் சுட்டிக்காண்பித்தார். அதேவேளையில்,நாட்டின் இந்த நிலையற்ற கல்வி கொள்கையால் தகுதியான மற்றும் ஆற்றல் மிக்க மாணவர்களும் பெரும் பாதிப்பினை எதிர்நோக்குவதாகவும் அவர் கூறினார்.

தேசிய முன்னணி அரசு மேற்கொள்ளும் இந்த நிலையற்ற கல்வி கொள்கையால் சிறந்த மாணவர்கள் கூட பல்வேறு சவால்களையும் சிக்கல்களையும் எதிர்நோக்குவதாக நினைவுக்கூர்ந்த நிக் நஸ்மி கடந்தகால மாணவர்களோடு ஒப்பிடுகையில் அவர்களிடமிருந்த உயர்ந்த ஆற்றலும் உயரிய பண்புகளும் தற்போது குறைவாகவே இருப்பதாகவும் குறிப்பிட்டார்.



நாட்டின் உயர்க்கல்வி கூடங்களின் தேர்ச்சி விகிதங்களும் பள்ளிகளின் தேர்ச்சி விகிதங்களும் மன நிறைவு அளிக்கும் வகையில் இல்லாததையும் சுட்டிக்காண்பித்த அவர் உலகத் தரத்தில் நமது நாட்டின் கல்வி கொள்கை வரையறுக்கப்பட வேண்டும் என்றும் விவரித்தார்.அன்மையில் சிலாங்கூர் பல்கலைக்கழகத்தில் (UNISEL) நடைபெற்ற இரு மொழி கல்வி கொள்கை தொடர்பிலான கருத்தரங்கின் போது அவர் இதனை தெரிவித்தார்.

# வெ.18,000 மதிப்பிலான பல்வேறு விதமான மதுபானங்கள் பறிப்பு

கிள்ளான் நகரான்மைக்க்ழகம் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையில் வெ.18,000 மதிப்பிலான பல்வேறு விதமான மதுபானங்களை கைப்பற்றினார்கள். கடந்த மூன்று முதல் ஐந்து மாதங்களாய் கிள்ளான் நகரான்மைக்கழகம் மற்றும் நிலம்,மாவட்ட மன்றத்தின் அனுமதியின்றி மதுபானங்களை விற்ற கடைகள் மீது மேற்கொண்ட அதிரடி சோதனை நடவடிக்கையில் அவற்றை கைப்பற்றியதாக நகரான்மைக்கழகத்தின் தலைவர் டத்தோ முகமாட் யாசிட் பீடின் தெரிவித்தார்.

காப்பார் வட்டாரத்தில் அனுமதியின்றி மதுபான விற்பனையில் ஈடுப்பட்டிருந்த அக்கடைகள் மீது இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என குறிப்பிட்ட அவர் அவ்விரு கடைகளில் ஒன்று 24 மணி நேர விற்பனை மையம் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் ஒரு கடையில் வெ.15,000க்கான 310 மதுபானங்களை கைப்பற்றிய வேளையில் மற்றொரு கடையில் வெ.3,000க்கான 188 மதுபானங்களையும் கைப்பற்றியதாக குறிப்பிட்டார்.



சோதனை மேற்கொள்ளப்பட்ட அவ்விரு கடை உரிமையாளர்களுக்கும் அபராத நோட்டிஸ் கொடுக்கப்பட்டுள்ள நிலையில் இன்னும் ஒரு மாதம் காலத்திற்குள் முறையான அனுமதி உட்பட அதற்கான சான்றுகளை முறையாக ஒப்படைத்து பறிமுதல் செய்யப்பட்ட மதுபானங்களை மீட்டுக்கொள்ளுமாறும் உத்தரவு விதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். அவர்கள் முறையான நடவடிக்கையினை முன்னெடுக்க தவறினால் பறிமுதல் செய்யப்பட்ட மதுபானங்கள் அழிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

சட்டவிதிப்படி குற்றம் நிருபிக்கப்பட்டால் வெ.2000 அபராதம் விதிக்கப்படலாம் என சுட்டிக்காண்பித்த அவர் பொது இடங்களில் அதிகமான மதுபான போத்தல்கள் காணப்படுவதாக கொடுத்த புகாரின் அடிப்படையில் அந்த வட்டாரத்தில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் சம்மதப்பட்ட இரு கடைகளும் அனுமதியின்றி மதுபானங்களை விற்றது தெரிய வந்ததாகவும் கூறினார்.

அதுமட்டுமின்றி, இந்த சோதனை நடவடிக்கை தொடரும் என்றும் எச்சரிக்கை விடுத்த டத்தோ யாசிட் பீடின் இவ்வட்டாரத்தில் அனுமதியின்றி அதிகமான மதுபானம் கடைகள் செயல்படுவதாக தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



# பால் மரம் வெட்டும் தொழிலாளிக்கு மாதச் சம்பளம் வெ.1200 மாண்புமிகு நூருல் இசா

பால்மரம் வெட்டும் தொழிலாளிக்கு மாதம் சம்பளம் வெ.1200 ஆக நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும் கெஅடிலான் கட்சியின் உதவித் தலைவருமான நூருல் இசா அன்வார் கோரிக்கை விடுத்தார்.இரப்பரின் விலை உலக சந்தையில் நிலையற்ற விலைத் தனைமையை கொண்டிருப்பதால் இரப்பர் மரம் சீவும் தொழிலாளர்களும் நிலையற்ற வருமானத்தை பெறுகிறார்கள்.அஃது அவர்களின் அன்றாட வாழ்வாதரத்தை பெரும் பாதிப்புக்குள்ளாக்குகிறது.

இயந்திரநுட்ப முறை.குறைந்த இரப்பர் உற்பத்திக்காலங்களில் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச வருமானம் கிடைப்பதற்கு கூட அஃது வழிவகுக்கும் என்றார். மேலும், காலசூழல், வானிலை சூழல்கள் காரணமாக பாதிப்படையும் தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு மாதமும் ஒரு நிரந்திர வருமானம் வருவதை உறுதி செய்ய வேண்டும். ஒவ்வொரு தொழிலாளருக்கும் ஒரு நிரந்திர வருமானம் இன்றையக் காலக்கட்டத்தில் மிகவும் தேவையான ஒன்றாக விளங்குவதாக நூருல் இசா தனது இணையப்பக்கதில் தெரிவித்துள்ளார்.



அரசாங்கத்தின் இரப்பர் உற்பத்தி ஊக்குவிப்புத் தொகை திட்டம் குறித்து கருத்துரைத்த நூருல் இசா இத்திட்டத்தின் கீழ் அனைத்து தரப்பினரும் நன்மை அடைவதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்.குறிப்பாக சிறிய தோட்டங்கள் மற்றும் சிறிய நிலையில் இரப்பர் மரம் வெட்டும் தொழிலாளர்களுக்கும் இத்திட்டம் நன்மையை கொண்டு வரவேண்டும்.அவர்கள் இத்திட்டத்தில் விடுப்பட்டு விடக்கூடாது என்றும் நினைவுறுத்தினார்.

இரப்பர் மரம் சீவும் ஒரு தொழிலாளியின் வருமானம் என்பது இங்கு கேள்விக்குறியாகவும் நிலையற்ற தன்மையிலும் இருப்பதால் அவர்கள் குறைந்த வருமானம் பெரும் எண்ணிகையில் அடங்குகிறார்கள். இந்நிலையால் நாட்டில் வறுமை நிலை மேலும் அதிகரிப்பதாக அவர் சுட்டிக்காண்பித்தார். இதற்கிடையில் இரப்பர் உற்பத்தியின் வருமானத்திற்காக காத்திருக்க வேண்டியிருப்பதால் தொழிலாளர்கள் தங்களி வருமானத்தை பெறவும் காத்திருக்க வேண்டியிருப்பதோடு அஃது காலதமதத்துடனே அவர்களை வந்தடைவது மிகவும் வேதனையாக இருப்பதாக தெரிவித்தார்.

மேலும்,இரப்பர் மரம் சீவும் தொழிலாளியின் வருமானமான வெ.763 என்பது வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களை காட்டிலும் சிறிய அளவில் மட்டுமே கூடுதல் என விவரித்த நூருல் இசா தீபகற்ப மலேசியாவை பொருத்தமட்டில் இத்தொகை மிகவும் குறைவென்றும் இஃது பால்மரம் வெட்டும் தொழிலாளிக்கு பெரியதொரு ஏமாற்றமானது என்றும் தனது வலைப்பக்கத்தில் தெரிவித்திருந்தார்.

நாட்டின் பொருளாதார சூழல் உட்பட அனைத்து நிலையையும் கவனத்தில் கொண்டு பால் மரம் வெட்டும் தொழிலாளியின் மாத வருமான அல்லது மாத ஊதியம் வெ.1200 இருக்க வேண்டும் என நூருல் இசா மீண்டும் வலியுறுத்தினார்.

# சிலாங்கூர் வாழ் ஏழ்மை மக்களுக்காக வெ.30 லட்சம் செலவில் இலவச உணவுத் திட்டம்

சிலாங்கூர் மாநிலத்திலுள்ள ஏழ்மை மக்களுக்காக இலவச சிலாங்கூர் உணவு திட்டத்தின் (SELANGOR FOOD STAMP)

கீழ் வெ.30 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று மாநில சுகாதாரம்,மகளிர் மற்றும் சமூகநல பிரிவின் ஆட்சிக்குழு உறுப்பினர் மாண்புமிகு டாக்டர் டரோயா அல்வி தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் சிலாங்கூரில் 5000க்கும் மேற்பட்ட ஏழ்மை வாழ் குடும்பங்கள் இந்த உதவியினை பெற தகுதியுள்ளவர்களாய் இருந்திட வாய்ப்பு இருப்பதாக அவர் குறிப்பிட்டார். இத்திட்டத்தை அமல்படுத்துவதற்கு முன்னர் அதற்கான இறுதிக்கட்ட விபரங்களை சேகரிக்கும் பணியில் முனைப்புக் காட்டப்பட்டு வருவதாக மேலும் கூறினார்.

இத்திட்டத்தின் கீழ் எந்தவொரு ஏழ்மை நிலை குடும்பமும் விடுப்பட்டு விடக்கூடாது என்பதில் தனி கவனம் செலுத்தப்பட்டு வரும் வேளையில் சிலாங்கூரிலுள்ள ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்களையும் தொடர்புக்கொண்டு தத்தம் பகுதிகளில் வசிக்கும் ஏழ்மை நிலை குடும்பங்களை அடையாளம் கண்டு பட்டியலிடுமாறு பணிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

அடையாளம் காணப்படும் ஏழ்மை நிலை குடும்பங்களுக்கு இச்சலுகை மாதாந்திர அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்ட அவர் இத்திட்டம் பெருநாள் காலங்களில் வழங்கப்படும் திட்டத்திலிருந்து மாறுப்பட்டதாக விளங்கிடும் என்றும் நினைவுறுத்தினார்.

இத்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்படும் குடும்பங்களுக்கு அவர்களின் சுமையை குறைக்கும் வண்ணம் மாதம் - மாதம் உணவு பொருட்களை பெற்றுக்கொள்ளும் கூப்பன் (பற்றுச்சீட்டு) வழங்கப்படும் என்றார்.அந்த கூப்பன் வழி அவர்கள் தேர்வு செய்யப்பட்ட விற்பனை மையங்கள் அல்லது பேராங்காடிகளில் பொருட்களை பெற்றுக்கொள்ளலாம் எனவும் டரோயா தெளிவுப்படுத்தினார்.

மக்களின் நலன் கருதி அவர்களின் பொருளாதார சுமையினை குறைக்கும் தூரநோக்கி சிந்தனையோடு மக்களின் சமூக நலனை குறிவைத்து மேற்கொள்ளப்படும் நவீன ஸ்மாட் சிலாங்கூர் திட்டமாகும். இத்திட்டம்

நிச்சயம் மக்களுக்கு சிறந்ததொரு நன்மையை ஏற்படுத்தும் என்றும் டாக்டர் டரோயா குறிப்பிட்டார்.









# சிலாங்கூரில் மகளிர் உரிமைக் காக்கப்படுகிறது. பெண்களுக்கு முதன்மை அளிக்கப்படுகிறது!!




சிலாங்கூர் மாநிலத்தில் மகளிர் உரிமைக்காக்கப்படுவதோடு மட்டுமின்றி பெண்களுக்கு முதன்மை அளிக்கும் பல்வேறு திட்டங்களும் அமலாக்கங்களும் தொடர்ந்து அமல்படுத்தப்பட்டு வருவதாக மகளிர்,சுகாதாரம் மற்றும் சமுகநலனின் ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் டரோயா அல்வி நினைவுறுத்தினார். அதேவேளையில் சிலாங்கூர் அரசு மகளிர் மேம்பாட்டு வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைக்கும் நன் ஆதரவு கிடைத்து வருவதாகவும் மேலும் கூறினார்.

அவ்வகையி, ஆற்றல் மிக்க மகளிர் எனும் திட்டம் பெண்களின் வளர்ச்சியையும் மேம்பாட்டினையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டதாகவும் அத்திட்டத்தின் வாயிலாக பெண்கள் தங்களை மேம்படுத்திக் கொள்ள முடியுமென குறிப்பிட்ட அவர் இத்திட்டத்திற்கு பெண்கள் மத்தியிலிருந்து நல்ல வரவேற்ப்பும் ஆதரவும் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதற்கிடையில் சிலாங்கூர் வாழ் மக்களின் பொருளாதார உயர்வினை காலத்திற்கு ஏற்ப இருப்பதை உறுதி செய்யும் வகையில் சிலாங்கூர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தை அறிமுகம் செய்து அதன் வழி மாநில வாழ் மக்களின் பொருளாதாரத்தை உயர்த்திட அரசு ஆவணம் செய்து வருவதாகவும் அஃது பெருமிதமான ஒன்றாகவும் அவர் குறிப்பிட்டார். அதேவேளையில் இத்திட்டத்தின் கீழ் சிலாங்கூர் மாநிலத்தின் சொத்துடமை சிலாங்கூர் மக்களுடனே பகிர்ந்துக் கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தார்.

கடந்த 8 ஆண்டுகளாய் உருவாக்கம் காணப்பட்ட ஒவ்வொரு திட்டங்களும் தற்போது அமலுக்கு வந்தவண்ணம் இருப்பதாகவும் தெரிவித்த டரோயா சிலாங்கூர் இலவச விவேக பேருந்து திட்டமும் அதில் அடங்கும் என்றார். இத்திட்டங்கள் ஒவ்வொன்றும் மாநில அரசின் மாபெரும் சாதனைகளின் பட்டியல்கள் என்றும் நினைவுறுத்தினார்.

நாட்டை ஆளும் தேசிய முன்னணி அரசை காட்டிலும் சிலாங்கூர் மாநில அரசு தொடர்ந்து மக்களுக்கான அரசாகவும் மக்கள் நலன் அரசாகவும் விளங்கி வரும் வேளையில் தேசிய முன்னணியின் மத்திய அரசாங்கம் ஊழல்,பதவி துஷ்பிரயோகம், அதிகாரத்துவத்துடன் மக்களை வேதனையிலும் துன்பத்திலும் ஆழ்த்தி வருவதாகவும் பதிவு செய்தார்.

அதேவேளையில், சிலாங்கூரில் தொடர்ந்து நமது ஆட்சி மலர்ந்திருக்க பெரும் ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கி வரும் சிலாங்கூர் வாழ் மக்களுக்கு சிலாங்கூர் மாநில அரசாங்கத்தின் சார்பில் நன்றியினை பதிவு செய்துக்கொண்ட டரோயா சிலாங்கூர் அரசாங்கம் தொடர்ந்து மக்களுக்கான அரசாங்கமாய் உயிர்ப்பித்திருக்கும் என்றும் உறுதி அளித்தார்.

## வாகனமோட்டிகளிடமிருந்து வெ,16 லட்சம் செலுத்தப்படாத அபராத தொகை வசூல்

பெட்டாலிங் ஜெயா மாநகர் மன்றம் வாகனமோட்டிகளிடமிருந்து 16 லட்சம் வெள்ளி செலுத்தப்படாத அபராத தொகையை வசூலித்துள்ளது.

கடந்தாண்டு டிசம்பர் மாதம் 1ஆம் தேதி முதல் இவ்வாண்டு பிப்ரவரி 29ஆம் தேதி வரை மேற்கொள்ளப்பட்ட அபராத தொகையைச் செலுத்தும் இயக்கத்தின் போது இந்த தொகை வசூலிக்கப்பட்டதாக பெட்டாலிங் ஜெயா டத்தோ பண்டார் முகமது அஜிசி முகமது ஜைன் கூறினார்.

அபராத தொகை வசூலிப்பு அபரிமிதமாக உயர்வு கண்டதற்கு சாலை போக்குவரத்து இலாகாவின் கருப்புப் பட்டியலில் தங்கள் பெயர் இடம் பெற்று விடும் என்று வாகனமோட்டிகள் அஞ்சியதே காரணம் என்று அவர் சொன்னார்.
கருப்புப் பட்டியலில் இடம் பெற்றால் சாலை வரியை புதுப்பிக்க முடியாத நிலை ஏற்படுவதை தவிர்ப்பதற்காக வாகனமோட்டிகள் விரைந்து தங்களின் அபாரத தொகையைச் செலுத்தினர் என்றார் அவர்.

கடந்த டிசம்பர் மாத 32,124 குற்றப்பதிவுகளுக்காக 495,000 வெள்ளியும் ஜனவரி மாதம் 19,272 குற்றப்பதிவுகளுக்காக 278,000 வெள்ளியும் பிப்ரவரி மாதம் 63,067 குற்றப்பதிவுகளுக்கு 834,480 வெள்ளியும் அபாராத தொகையாக வசூலிக்கப்பட்டது என முகமது அஜிசி தெரிவித்தார்.

இன்னும் அபராத தொகையைச் செலுத்தாதவர்களின் பெயர்ப் பட்டியலை தாங்கள் சாலை போக்குவரத்து துறைக்கு கட்டங் கட்டமாக அனுப்பவுள்ளதாக கூறிய அவர், தொடக்க கட்டமாக 641 வாகனமோட்டிகளின் பெயர்கள் கருப்பு பட்டியலில் சேர்க்கப்படுவதற்காக அனுப்ப பட்டுள்ளது என்றார்.

அந்த 641 வாகனமோட்டிகளில் 134 பேர் தங்கள் பெயர் சாலை போக்குவரத்து இலாகாவின் கருப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டதை அறிந்து அபராத தொகையைச் செலுத்துவதற்காக மாநகர் மன்றத்தை அணுகியதாகவும் அவர்களுக்கு கழிவு ஏதுமின்றி முழு தொகையையும் அபராதமாக விதிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## கிள்ளான் நகராண்மைக்கழகத்தில் 7 கோடியே 16 லட்சம் வெள்ளி மதிப்பீட்டு வரி வசூல்

கிள்ளான் நகராண்மைக் கழகம் கடந்த பிப்ரவரி 29ஆம் தேதியுடன் முடிவடைந்த முதலாம் தவணைக்காலத்தில் 7 கோடியே 16 லட்சத்து 70 ஆயிரம் வெள்ளியை மதிப்பீட்டு வரியாக வசூல் செய்த து.

அக்காலக்கட்டத்தில் வசூலிக்க வேண்டிய மொத்த வரியின் மதிப்பு 8 கோடியே 7 லட்சம் வெள்ளியாகவும் இன்னும் செலுத்தப்படாத பழைய பாக்கித் தொகை 3 கோடியே 78 லட்சத்து 50 ஆயிரம் வெள்ளியாகவும் இருந்த து என்று நகராண்மைக்கழகத் தலைவர் டத்தோ முகமது யாசிட் பிடின் கூறினார்.

மதிப்பீட்டு வரியைப் பொறுத்த வரை மொத்த தொகையில் 72 விழுக்காட்டை அதாவது 6.2 கோடி வெள்ளியை வசூலித்து விட்டோம். செலுத்தப்படாத தொகையில் 79.7 லட்சம் வெள்ளி அதாவது 21 விழுக்காட்டுத் தொகை வசூலிக்கப்பட்டு விட்டது என்றார் அவர்.

இவ்வாண்டு மார்ச் மாதம் தொடங்கி மதிப்பீட்டு வரியைச் செலுத்த தவறும் சொத்து உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

## இன்பென்ஸ் ஏற்பாட்டிலான தொழில்திறன் பயிற்சி வழி 3000 இளைஞர்கள் பயன் பெற்றனர்

ஆட்சிக்குழு உறுப்பினர் கணபதிராவ் பெருமிதம்

இன்பென்ஸ் அனைத்துலக கல்லு ரியில் வழங்கப்பட்ட தொழில் திறன் பயிற்சியின் வழி இதுவரை சிலாங்கூர் மாநிலத்தைச் சேர்ந்த சுமார் மூவாயிரம் மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர் என்று மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் கூறினார்.

மாதம் மூவாயிரம் வெள்ளிக்கும் குறைவான வருமானத்தைப் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்காக விஷேசமாக இந்த பயிற்சித் திட்டம் அறிமுகப்பட்டதாக அவர் சொன்னார்.

இந்த பயிற்சித் திட்டத்திற்கு யுபென் எனப்படும் சிலாங்கூர் மாநில பொருளாதார திட்டமிடல் பிரிவு ஏற்பாட்டு ஆதரவை வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாணவர்களுக்கு உதவுவதற்கு ஏதுவாக குறைந்த கட்டணத்தில் கல்வி வழங்குவதை இன்பென்ஸ் தனது கடப்பாடாக கொள்ள வேண்டும் என நாங்கள் தொடக்கம் முதலே வலியுறுத்தி வந்தோம்.

வருமானம்தான் பிரதான நோக்கமாக இருந்தால் மற்ற தனியார் உயர்கல்விக் கூடங்களைப் போல் இதுவும் செயல்பட்டிருக்க முடியும். ஆனால், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை இலக்காக கொண்டு நாம் செயல்பட்டு வருகிறோம் என்றார் அவர்.

## வீட்டுடைமைப் பிரச்னைக்குத் தீர்வு காணும் விவேக வாடகைத் திட்டம்

பெருந்தொகையை முன்பணமாகச் செலுத்த இயலாத காரணத்தால் சொந்த வீடுகளைப் பெறுவதில் சிரமத்தை எதிர்நோக்கும் மக்களுக்கு உதவும் பொருட்டு விவேக வாடகைத் திட்டத்தை சிலாங்கூர் அரசு உருவாக்கியுள்ளது.

வீட்டுக்கு மாதா மாதம் செலுத்தும் வாடகையில் ஒரு பகுதியை குடியிருப்பாளர்களிடமே மீண்டும் வழங்குவதன் மூலம் அவர்கள் சொந்த வீட்டுக்கான முன்பணத்தைச் செலுத்துவதற்குரிய வாய்ப்பினை ஏற்படுத்த முடியும் என்று மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ இஸ்கந்தார் அப்துல் சமாட் கூறினார்.



அரசாங்க வீடுகளில் வாடகைக்கு வசிப்போருக்கு உதவும் வகையில் இத்திட்டம் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. குடியிருப்பாளர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் அவர்கள் மாதா மாதம் செலுத்தி வாடகைப்பணத்தில் குறிப்பிட்ட தொகை திரும்ப ஒப்படைக்கப்படும்.
உதாரணத்திற்கு அரசாங்க வீட்டில் வாடகைக்கு இருப்பவர் மாதம் 500 வெள்ளி அல்லது 750 வெள்ளியை வாடகையாகச் செலுத்தி வந்தால் அத்தொகையில் 150 வெள்ளி அல்லது 300 வெள்ளி மாதா மாதம் தனியாக ஒதுக்கப்பட்டு ஒப்பந்தம் முடியும் போது மொத்தமாக குடியிருப்பாளரிடம் வழங்கப்படும்.

அந்த தொகையை முன்பணமாகச் செலுத்தி சொந்த வீட்டை வாங்குவதற்குரிய வாய்ப்பினை சம்பந்தப்பட்ட குடியிருப்பாளருக்கு ஏற்படுத்தித் தர இயலும் என்றார் அவர்.

இவ்விவகாரம் தொடர்பில் விரிவான ஆய்வினை நடத்தி வரும் மாநில அரசு வாடகைத் தொகை, ஒப்பந்த காலம் மற்றும் திரும்பித் தரப்படும் தொகை போன்ற விபரங்களை மதிப்பீடு செய்து வருகிறது என்று இஸ்கந்தார் கூறினார்.

தற்போது மாநில அரசு கட்டுப்படி விலையிலான வீடுகளை மொத்தமாக வாங்கி அவற்றை வசதி குறைந்தவர்களுக்கு வாடகைக்கு விடுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## சுயேச்சை ஊடகங்களைக் கண்டு புத்ரா ஜேயா அஞ்சுகிறது




இணைய ஊடகமான தி மலேசியன் இன்சைடர் வலைதளத்திற்குள் பயனீட்டாளர் நுழைவதைத் தடுக்கும் வகையில் அதன் இணைய சேவையை மலேசிய தொடர்பு மற்றும் பல்முனைத் தகவல் ஆணையம் முடக்கியதை கெஅடிலான் கட்சி கடுமையாகச் சாடியது.

மலேசியாவில் இணைய தணிக்கை மேற்கொள்ளப்படாது என்று பல்முனைத் தகவல் சட்டத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ள நிலையில் இத்தடை விதிக்கப்பட்டுள்ளது ஆளும் தரப்பினரின் கெடுபிடிப் போக்கை காட்டுவதாக உள்ளது என்று அக்கட்சியின் தொடர்புப் பிரிவு இயக்குநர் ∴பாமி ∴பாட்சில் கூறினார்.

நாட்டின் முக்கியத் தலைவர் சம்பந்தப்பட்ட 260 கோடி வெள்ளி நன்கொடை தொடர்பான செய்திகளை அந்த ஊடகம் வெளியிட்டதன் காரணமாக அத்தடை விதிக்கப்பட்டிருக்கலாம் என நம்ப ப்படுவதாக அவர் சொன்னார்.

சுயேச்சை ஊடகங்கள் குறிப்பாக இணைய தகவல் சாதனங்களைக் கண்டு புத்ரா ஜெயா அஞ்சுவதை இது காட்டுகிறது. நாட்டின் முக்கிய விவகாரங்களில் அந்த ஊடகங்களை அடக்க முடியாது என்ற அச்சம் ஆளும் தரப்பினருக்கு எழுந்துள்ளது என்றார் அவர்.

அரசாங்கத்தின் இந்நடவடிக்கை நாட்டின் பத்திரிகை சுதந்திரம் மீது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அவர் சொன்னார்.

அந்த இணைய ஊடகத்திற்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடையை அகற்றுவது குறித்து புத்ரா ஜெயா பரிசீலிக்க வேண்டும் என்றும் ∴பாமி கேட்டுக் கொண்டார்.

# மலேசியர்களின் கழுத்தை நெரிக்கும் அம்னோவின் ஜி.எஸ்.டி







மலேசியர்களை பொருளாதார பின்னடைவிலிருந்து மீட்க முடியாத சூழலை உருவாக்கி மக்களுக்கு மேலும் அழுத்ததையும் சுமையினையும் ஏற்படுத்தியிருக்கும் அம்னோ அரசாங்கத்தின் ஜி.எஸ்.டி. அமலாக்கமானது மலேசியர்களின் கழுத்தை நெரிக்கும் அளவிற்கு மோசமான சூழலை உருவாக்கியுள்ளது.பொருளாதார ரீதியிலும் மலேசியர்களிடையிலான பணப்புலக்கத்திலும் பெரியதொரு பின்னடைவினை இந்த ஜி.எஸ்.டி. உருவாக்கியிருக்கிறது.

ஜி.எஸ்.டி.யால் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நன்மை ஏற்படும் என்பதெல்லாம் வெறும் கட்டுக்கதையே.அஃது அறிவுக்கு எட்டாத கற்பனை.ஜி.எஸ்.டி. அமல்ப்படுத்தப்பட்டு ஓராண்டை எட்டிவிட்ட நிலையில் இதுவரை இந்த ஜி.எஸ்.டி.யால் நன்மையடைந்த பொது மக்கள் யாருமில்லை. மாறாய்,அம்னோவின் விசுவாசிகளும் அவர்களின் அடிவருடிகளும் மட்டுமே இந்த ஜி.எஸ்.டி. அமலாக்கத்தால் வயிறு வளர்த்துள்ளனர் என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை.




அம்னோ அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை மிகவும் மோசமான நிலைக்கு கொண்டு சென்று விட்டது. நாட்டின் பொருளாதார மீட்டெடுக்க அரசாங்கம் மேற்கொண்ட எந்தவொரு திட்டமும் நடவடிக்கையும் எவ்வித நன்மையையும் ஏற்படுத்தவில்லை.மாறாய், அஃது படுமோசமான சூழலைதான் உருவாக்கியது. கடந்தாண்டு ஏப்ரலில் ஜி.எஸ்.டி. நடைமுறைப்படுத்தப் பட்டதிலிருந்து மலேசியர்கள் பெரும் இக்கட்டான சூழலில் தங்களின் வாழ்வினை நகர்த்த வேண்டியிருந்ததை யாரும் மறுத்திட முடியாது.அதற்கு நாட்டின் பொருளாதார மந்த நிலையும் ஜி.எஸ்.டி.யால் விளைந்த பொருளாதார சூழலுமே காரணியம்.

அம்னோ அரசாங்கம் அமல்படுத்திய ஜி.எஸ்.டி. மக்களின் அன்றாட வாழ்வியல் சூழலை வேதனைக்குள்ளாக்கியிருப்பதோடு அஃது அவர்களின் வாழ்க்கையையும் வதைக்கிட செய்கிறது.ஜி.எஸ்.டி. அமலாக்கத்தால் வறுமை நிலையில் உள்ளவர்களும் குறைந்த சம்பளம் பெறுபவர்களும் பெரும் இன்னல்களுக்கு ஆளாகிறார்கள்.ஜி.எஸ்.டி.மக்களுக்கு எவ்வித நன்மையையும் ஏற்படுத்திட வில்லை. மாறாய்,பொருளாதாரம் உட்பட பல்வேறு நிலைகளில் பலவீனமாக செயல்படும் அம்னோ அரசாங்கத்திற்கும் அதன் தலைவர்களுக்கும்தான் அஃது உதவுகிறது.

ஜி.எஸ்.டி.யை சமாளிப்பதற்காகவும் மக்களின் சுமையை குறைப்பதற்காகவும் பிரிம் உதவி தொகை வழங்கப்படுவதாக கூறிடும் அரசாங்கம் மக்களே தங்களுக்கு பிரிம் உதவிதொகை தேவையில்லை என கூறினால் ஜி.எஸ்.டி.யை அரசாங்கம் அகற்றுமா எனும் கேள்வியை நாம் முன் வைத்தாலும் அது அவசியமற்றதுதான்.எது எப்படியானாலும், அரசாங்கம் பிரிம் உதவித்தொகையை இரத்து செய்யாது. எனெனில் வழங்கப்படும் பிரிம் உதவிதொகையோடு ஒப்பிடுகையில் ஜி.எஸ்.டி.யால் கிடைக்கப்பெறும் லாபமானது பல்மடங்கு அதிகம்.

ஜி.எஸ்.டி.நடைமுறையால் பொருட்களின் விலை குறையும் என்றும் மக்களுக்கு பல்வேறு நன்மைகள் வந்து சேரும் என்றும் வாய் கிழிய முழங்கிய அமைச்சர்களும் அரசு அதிகாரிகளும் இன்று மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளையும் திண்டாட்டங்களையும் கண்டு ஓடி ஒலிந்துக்கொண்டனர்.இவர்களின் சுயநலத்தால் மக்கள் தொடர்ந்து பலியாகி வருவதை இங்கு யாரும் கண்டுக்கொள்வதில்லை. ஜனநாயகம் மறுக்கப்பட்ட நாட்டில் நமது குரல்களும் கோரிக்கைகளும் பயனற்றதாய் போனது. இங்கு அதிகாரமும் ஊழலும் தலைத்தூக்கியிருப்பதால் நமது நியாயமான கோரிக்கைகள் ஆட்சி அதிகாரத்தின் காதுகளில் கேட்காது.

ஜி.எஸ்.டி.நடைமுறைப்படுத்த போவதாக நஜிப் தலைமையிலான அம்னோ அரசாங்கம் அறிவித்த போது அதனை வன்மையாக கண்டித்து தனது எதிர்ப்பினை எதிர்கட்சிகளும் பொது மக்களும் வெளிப்படுத்தியும் கூட தன்னை மக்களுக்கான அரசாங்கம் என மாயை தோற்றத்தை ஏற்படுத்தி வரும் அம்னோ தேசிய முன்னணி அரசாங்கம் அதனை அலட்சியம் காட்டியதோரு ஜி.எஸ்.டி.யை அமல்ப்படுத்துவதில் பிடிவாதமாக இருந்தது. மக்களுக்கும் நாட்டுக்கும் எவ்வித நன்மையையும் கொண்டு வராத இந்த ஜி.எஸ்.டி. யை அமல்படுத்துவதில் அம்னோ அரசாங்கம் விடாபிடியாக இருந்ததன் பின்னணி என்ன?

பொருள் சேவை வரியென சொல்லபட்டும் 6 விழுகாடு ஜி.எஸ்.டி. ஆனது ஒவ்வொரு மலேசியர்கள் மீது கட்டாயமாக திணிக்கப்படும் வரியாகும். இஃது ஒருவகை அதிகாரத்துவ கொடுங்கோல் முறையே. ஜி.எஸ்.டி.நாட்டின் பொருளாதாரத்தை காப்பதாக அன்மையில் பிரதமர் சொன்னது ஏற்புடையதல்ல.மாறாய்,ஜி.எஸ்.டி.நாட்டை விட நஜிப்பை காத்தது என்பதுதான் பெரும் உண்மை.நஜிப் தொடர்ந்து ஆட்சி செய்யவும் ரோஸ்மா தொடர்ந்து ஊர் சுற்றவும்தான் ஜி.எஸ்.டி.பயன்பட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.அதேவேளையில்,தூரநோக்கும் மக்கள் நலன் மீது அக்கறையில்லாத இந்த அரசாங்கம் விதித்த ஜி.எஸ்.டி.யால் மக்கள் பெரும் பாதிப்பினை எதிர்நோக்கும் அதேவேளையில் வறுமைநிலை மக்களும் குறைந்த வருமானம் பெறுபவர்களும் பொருளாதார அழுத்ததால் மன உலைச்சலுக்குதான் ஆளாக வேண்டியிருக்கும்.

நாட்டில் ஜி.எஸ்.டி.அமலுக்கு பின்னர் ஏழை பணக்காரர்களின் இடைவெளி விரிவாகிவிட்டது.ஏழ்மை மற்றும் வறுமை மிகவும் மோசமான சூழலை ஏற்படுத்தியிருக்கிறது. பொருட்களின் விலையேற்றம் தொடர்ந்து அதிகரித்துகொண்டேதான் போகிறது.விலையை கட்டுப்படுத்துவதில் அம்னோ அரசாங்கம் தொடர்ந்து தோலிவியைதான் கண்டு வருகிறது. இந்நிலையில் மின்சாரம் உட்பட சிலவற்றுக்கு அரசு கொடுத்து வந்த உதவித் தொகை மீட்கப்பட்டது மக்களின் வாழ்வாதரம் பெரும் கேள்விக்குறியாகி வருகிறது.சூழல் இவ்வாறு இருக்க ரிங்கிட்டின் வீழ்சியானது மற்றுமொரு பேரிடியானது.




ஜி.எஸ்.டி.நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வளமான இலக்கை நோக்கி கொண்டு செல்லும் என்றெல்லாம் கதை சொல்லபட்டாலும் உண்மையாக ஜி.எஸ்.டி. மக்களுக்கு சுமையாகவே அமைந்துள்ளது என்பதுதான் உண்மை.குறிப்பாக எழைகளுக்கு அஃது பெரியதொரு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. நாட்டில் 40 விழுகாடு மக்கள் வெ.3000க்கும் குறைவான மாத வருமானம் உள்ளவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.ஜி.எஸ்.டி. யால் அவர்கள் படும் துயரத்தையும் வேதனையையும் எழுத்தால் விவரித்துவிட முடியாது. அவர்களின் வருமானம் இன்றையக்காலக்கட்டத்தில் போதுமானதாய் இல்லாமல் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்னை எண்ணிலடங்காதவைகள்.

ஜி.எஸ்.டி.அமல்படுத்துவதற்கு முன்னரும் அமல்ப்படுத்திய காலக்கட்டத்திலிருந்தும் தொடர்ந்து எதிர்ப்புக்களும் கவனமீர்ப்புக்களும் நாட்டில் நிகழ்ந்தவண்ணம்தான் இருக்கிறது. பாதிக்கப்படும் மலேசியர்களுக்காக தொடர்ந்து குரல்கள் ஒலித்துக்கொண்டுதான் இருக்கிறது. ஆனால்,ஓங்கி உயரும் குரல்களின் குரல்வலையை ஆட்சி அதிகாரமும் ஊழல்வாத அரசும் நெரிக்கிறது. எல்லா நிலையிலும் முடக்குகிறது.இருந்தும் மக்களுக்காக கெஅடிலான்,ஜசெக உட்பட எதிர்கட்சிகளும் பல்வேறு அமைப்புக்களும் தொடர்ந்து போராடிக்கொண்டுதான் இருக்கிறது.

ஒவ்வொரு முறையும் ஜி.எஸ்.டி.யை எதிர்த்து போராடும் போது வடக்கும் முதல் தெற்கு வரையிலான ஆயிரம் கணக்கான மலேசியர்கள் இந்த ஊழல்வாதம் நிறைந்த ஆளும் தேசிய முன்னணி எதிராக அணித்திரள்கிறார்கள்.ஆனால்,அதையெல்லாம் இந்த அதிகாரத் திமிர்ப்பிடித்த அம்னோ அரசாங்கம் ஒரு பொருட்டாகவே கருதாமல் மக்களின் உரிமையை பறிப்பதோடு உணவுகளையும் குழித்தோண்டி புதைத்து விடுகிறது. இவ்வளவு ஆர்ப்பாட்டம் போராட்டங்களுக்கு மத்தியிலும் ஜி.எஸ்.டி.யை இந்த அம்னோ அரசாங்கம் உயர்த்தி பிடிக்க சுயநலமே காரணம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜி.எஸ்.டி.மட்டுமின்றி மக்களுக்கு சுமையையும் அழுத்ததையும் கொடுத்திடும் ஆளும் ஊழல்வாத அம்னோ அரசாங்கத்தின் திட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் இந்த கொடுரமான வன்கொடுமை அரசின் பிடியிலிருந்து நாட்டையும் நாட்டு மக்களை காப்பாற்றுவதற்கு ஆளும் தேசிய முன்னணி அரசிற்கு நாம் ஓய்வுக்கொடுக்க வேண்டும். ஓய்வுக் கொடுக்கும் காலமும் கனிந்து விட்டது.சரவாக் மாநில தேர்தல் அதற்கு முன்னோட்டமாக அமையும் வேளையில் நாட்டின் 14வது பொது தேர்தல் அம்னோ தேசிய முன்னணி அரசாங்கத்தை ஆட்சி அதிகாரத்திலிருந்து அகற்றும் தலமாகவும் உருவாகும் என்பது ஒவ்வொரு மலேசியர்களின் எதிர்பார்ப்பும் நம்பிக்கையுமாகும்.

நாட்டின் பொருளாதாரம் நிலையில்லாமல் தொடர்ந்து வீழ்ச்சியினை நோக்கி நகர்ந்துக்கொண்டிருக்கும் சூழலில் மக்கள் அனுபவிக்கும் அழுத்ததிற்கும் வலுவுக்கு மீறிய சுமையையும் குறைத்திட அரசாங்கம் எண்ணம் கொண்டிருந்தால் உடனடியாக ஜி.எஸ்.டி.யை அகற்றிட வேண்டும்.அல்லது மக்கள் மீது இறக்கப்பட்டு மக்களின் சுமைகளை குறைத்திடும் விவேகமாக செயல் திட்டத்தையாவது கொண்டிருக்க வேண்டும்.அவ்வாறு அரசாங்கம் செய்திட முன்வராவிட்டால் அரசாங்கத்தின் இந்த ஜி.எஸ்.டி கொள்கையானது நாட்டின் மாபெரும் அரசியல் மாற்றத்திற்கு வித்திடும் என்பது அம்னோ அரசாங்கத்திற்கு மலேசியர்கள் விடுக்கும் எச்சரிக்கை.






## அன்வாரை விடுவிக்க கோரும் பதாகைகள் நீதிமன்றத் தீர்ப்பை அவமதிக்கிறதா? - கெஅடிலான் கட்சி மறுப்பு

டத்தோஸ்ரீ அன்வார் இப்ராகிமை விடுவிக்க கோரும் பதாகைகள் நீதிமன்றத் தீர்ப்பை அவமதிக்கும் வகையில் உள்ளதாக சிலாங்கூர் அம்னோ சுமத்தியுள்ள குற்றச்சாட்டை கெஅடிலான் கட்சி வன்மையாக மறுத்துள்ளது.

அன்வார் அரசியல் கைதி என்பதை ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்துள்ளதை அம்னோ உணர்ந்து கொள்ள வேண்டும் என்று சிலாங்கூர் மந்திரி புசாரின் அரசியல் செயலாளர் சுகாய்மி ஷாபி கூறினார்.

டத்தோஸ்ரீ அன்வார் சட்டத்திற்குப் புறம்பான முறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று ஐ.நா.வின் தடுப்புக் காவல் மீதான குழு ஏகமனதாக கருத்துரைத்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

அந்த பதாகைகளைப் பொருத்துவதற்கு ஊராட்சி மன்றங்கள் அனுமதி வழங்கியுள்ளன. அடக்கு முறைக்கும் அநீதிக்கும் எதிராக போராடும்படி பொதுமக்களை வலியுறுத்தும் தரப்பினர் நாங்கள்தான் என்பதை அந்த பதாகைகளில் இடம் பெற்றுள்ள கெஅடிலான் கட்சியின் சின்னம் புலப்படுத்துகிறது என்றார் அவர்.

சபாக் பெர்ணமில் வைக்கப்பட்டுள்ள அம்னோ/ பாரிசானுக்குச் சொந்தமான ராட்சத பதாகைக்கு மாநில அரசு ஊராட்சி மன்றங்களின் வாயிலாக எந்த எதிர்ப்பையும் தெரிவிக்க வில்லை என்பதையும் சுகாய்மி சுட்டிக்காட்டினார்.

இது தவிர பாரிசான் அரசாங்கத்தின் 1அஸாம் திட்டம் குறித்த பதாகைகள் மாநிலம் முழுவதும் உள்ளன. தகவல் சுதந்தரத்திற்கு மதிப்பளிக்கும் காரணத்தால் அவற்றுக்கு எதிராக நாம் குரல் கொடுக்கவில்லை என்றார் அவர்.

அன்வாரை அரசியல் கைதி என வகைப்படுத்தியதன் மூலம் சிலாங்கூர் அரசு நீதிமன்றத் தீர்ப்பை அவமதித்து விட்டதாக கூறி சிலாங்கூர் அம்னோ போலீசில் புகார் செய்திருந்த து.

## குடியிருப்பாளர்களுக்கு இலவச பேருந்துச் சேவையை ஏற்படுத்தித்தருவீர்




வீடமைப்பு மேம்பாட்டாளர்களுக்கு மந்திரி புசார் கோரிக்கை

புதிதாக உருவாக்கப்படும் வீடமைப்புத் திட்டங்களில் பொதுமக்களின் வசதிக்காக ஸ்மார்ட் சிலாங்கூர் இலவச பஸ் சேவையை ஏற்படுத்தித் தரும்படி சம்பந்தப்பட்ட மேம்பாட்டாளர்களை மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

புதிய வீடமைப்புத் திட்டங்களில் குடியிருப்போர் அந்த சலுகையைப் பெறுவதை உறுதி தாம் உறுதி செய்யவுள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ முகமது அஸ்மின் அலி கூறினார்.

குடியிருப்பாளர்களுக்கு இலவச பஸ் சேவையை ஏற்படுத்தித் தருவது தொடர்பில் தாம் வீடமைப்பு மேம்பாட்டாளர்களிடம் பேச்சு நடத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலவச பஸ் சேவையை வீடு வாங்குவோருக்கு ஏற்படுத்தித் தருவதற்கு மாநிலத்திலுள்ள அனைத்து மேம்பாட்டாளர்களும் தயாராக இருக்க வேண்டும். லாபத்தை மட்டும் குறிக்கோளாக கொள்ளாமல் தங்களுக்குள்ள சமூக கடப்பாட்டையும் அவர்கள் நிறைவேற்ற வேண்டும் என்றார் அவர்.

இதனிடையே, வரும் ஜூலை மாதம் மாநிலத்திலுள்ள அனைத்து ஒன்பது மாவட்டங்களுக்கும் இலவச பஸ் சேவையை விரிவு படுத்துவதற்கு ஏதுவாக 41 பஸ்கள் தயார் படுத்தப்பட்டுள்ளதாகவும் அஸ்மின் சொன்னார்.

இலவச பஸ் சேவையை நடத்துவற்கு அதிக செலவான போதிலும் பொதுமக்களுக்கு தேவையான வசதிகளைச் செய்து தருவதில் தங்களுக்குள்ள கடப்பாட்டை மாநில அரசு நிறைவேற்றத் தவறாது என அவர் மேலும் சொன்னார்.

கடந்தாண்டு ஜூலை மாதம் இலவச பஸ் சேவை மாநிலத்தில் தொடக்கப்பட்டது. ஜூலை தொடங்கி நவம்பர் மாதம் வரை சுமார் நான்கரை லட்சம் பேர் அந்த இலவச பஸ் சேவையைப் பயன்படுத்தினர்.



## அம்னோ-பாரிசான் தன்மானமுள்ள கட்சியா? - இஸ்கந்தர் அப்துல் சமாட்



அம்னோ/பாரிசான் தன்மானமுள்ள கட்சியாக இருந்தால் நடப்பு சர்ச்சைகளுக்குத் தீர்வு காணும் வகையில் உடனடியாக பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்று மாநில பாஸ் கட்சியின் சிலாங்கூர் மாநிலத் தலைவர் டத்தோ இஸ்கந்தார் அப்துல் சமாட் கூறினார்.

தன்மானமும் சுயமரியாதையும் உள்ள கட்சி என்பதை நிரூபிப்பதற்கு ஏதுவாக அக்கட்சி பொதுத்தேர்தலை உடனடியாக நடத்துவது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இது போன்ற சிக்கலான சூழ்நிலையை எதிர்நோக்கும் பட்சத்தில் தன்மானமுள்ள எந்த அரசாங்கமும் உடனடியாக பொதுத்தேர்தலை நடத்துவதற்கு தயாராகி விடும். இதன் மூலம் மக்களின் ஆதரவு தங்களுக்கு உள்ளதை அந்த அரசாங்கத்தால் நிரூபிக்க இயலும். ஆனால், அம்னோ பாரிசான் அரசாங்கம் அத்தகைய தன்மானம் உள்ள கட்சியாக விளங்குகிறதா? என்று அவர் கேள்வியெழுப்பினார்.

மறு தேர்தலை நடத்துவதன் மூலம் மட்டுமே நாட்டின் கௌளரவத்தை மீண்டும் நிலை நாட்ட முடியும் என்பதோடு லஞ்சமும் ஊழலும் அற்ற அரசாங்கத்தை தேர்ந்தெடுப்பதற்குரிய வாய்ப்பும் பொதுமக்களுக்கு ஏற்படும் என்றார் அவர்.

பிரதமரும் அம்னோ பாரிசான் அரசாங்கமும் அகற்றப்பட வேண்டும் என அனைவரும் விரும்புவதை பாஸ் கட்சியின் இந்த கோரிக்கை தெளிவாக எடுத்துரைப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

